
# புன்னகை இளவரசன்





06.04.1954 - 22.05.2008


எழுத்தாளர்

## சிவலிங்கம் சிவபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகை இளவரசன்



## அமரர் சிவலிங்கம் சிவபாலன்

அவர்களது நினைவாக

கலை இலக்கிய நண்பர்களால்
22.06.2008 பாரிஸில் நடாத்தப்பட்ட
அஞ்சலி நினைவரங்கில் வெளியிடப்பட்ட

# சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்







மலராக
06-04-1954

சருகாக
23-05-2008

## அமரர். சிவலிங்கம் சிவபாலன்

பிரபல கவிஞரும் எழுத்தாளருமான சிவலிங்கம்-சிவபாலன் அவர்கள் 23 05 2008ல் லண்டனில் காலமாகியுள்ளார் என்னும் செய்தியை அவருடைய நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

நல்லடக்கம் பற்றிய அறிவித்தல் பின்னர் அறியத்தரப்படும்
தொடர்புகட்கு :- 00 44 208 5514 446

## கண்ணீர் அஞ்சலி

கவிதைகளால் கதைகளால் கட்டுரைகளால்
பத்திரிகைகளிலெல்லாம் பவனி வந்தவனே!

கவியரங்கங்கள் கருத்தரங்கங்கள் பட்டி மன்றங்களென
மேடைகளையெல்லாம் அலங்கரித்தவனே!

உதடுகள்கூட நோகாமல் உரையாடும்
உன் குரலோசை மௌனித்துக் கொண்டதோ?!

புல்கள்கூட கசங்காமல் நடக்கும்
உனது பாதங்கள் ஓய்வெடுத்துக் கொண்டனவோ?!

உடம்பிராய் உன்னை பெற்றெடுக்க பாரிஸ் உன்னை வாழவைக்க
இன்று லண்டன் உன்னை முழுமையாகத் தத்தெடுத்துக் கொண்டதோ?!

நீ மரணித்த செய்தியை எங்களால் ஜீரணிக்கமுடியவில்லை
கனத்த மனங்களோடு எங்கள் கண்ணீர் அஞ்சலிகளை
உனக்கு காணிக்கையாக்குகின்றோம்.........

கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் -பாரிஸ்

அமரர் சிவலிங்கம் சிவபாலனின் 31ம் நாள் தினத்தையொட்டி பாரிஸில் ஓர் அஞ்சலிக் கூட்டம் நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம். இது சம்மந்தமான மேலதிகமான விபரங்கட்கு
வண்ணை தெய்வம் (01 48 61 42 23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவலிங்கம் சிவபாலன் நடந்து வந்த பாதை

கலையைப் புனிதமாகக் கருதினால்த்தான் சிறப்படைய முடியும் நன்குணர்ந்தவராக கலைவாழ்வில் ஈடுபட்டவர் திரு.சிவலிங்கம் சிவபாலன்.

இனிய சுபாவம் சாந்தம் குடிகொண்ட முகம் கோபம் வரமாட்டாதோ! என்று வியக்கவைக்கும் நற்குணம். பழகும் பண்பு இத்தகைய சிறப்புகளோடு. பிரான்ஸில் அடைக்கலம் புகுந்த பின்பும். ஆளான மண்ணையும், மக்களையும் நேசிக்கும் போற்றுதலுக்குரியவராகத் திகழ்ந்தவர். கலை இலக்கிய வானில் ஒளிமிக்க எழில்த் தாரகையாகவும் ஈழத்து எழுத்துலகுப் பூங்காவில் குறிப்பாகப் புலம்பெயர் தமிழ்ப் பூங்காவில் நறுமணம் வீசி நலமிகு பூங் கொடியாக விளங்கியவர் திரு.சிவலிங்கம் சிவபாலன்.

(06 – 04 – 1954) யாழ்ப்பாணம் உரும்பிராயில்ப் பிறந்தவர். (1985) பிரான்ஸ் மண்ணில் அடைக்கலம் புகுந்தவர் பூவுலக வாழ்க்கைப் பயணத்தில் (54) வயதுவரை தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தவர். (24 – 05 – 2008) திகதிக்குப் பின்னர் என்னானார்!...?

கலை இலக்கிய வாழ்வில் மின்னிய நட்ஷத்திரம் எங்கு போய் ஒழிந்து கொண்டது? உரும்பிராய் திரு.திருமதி. சிவலிங்கம் தம்பதிகளுக்கு இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தவர். வளர்ப்பில் கட்டுப்பாடுடைய வாழ்வுக்கு அடிக்கல்லாக வளர்க்கப்பட்ட திரு.சிவலிங்கம் சிவபாலன் பிரான்ஸில் குடும்பத்தோடு இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையாகவும் வாழ்ந்து வந்தவர்.

இருபது வருடங்களாக பிரான்ஸ் ஓரே இடத்தில் சோர்வற்றவராக உழைத்தும் வந்தவர். வீடுமுறை நாட்களில் எழுத்துப் பணியிலும், கலை விழாக்கள், கலைஞர்களைச் சந்திப்பதிலும், அறிவார்ந்த உரையாடல்களில் மகிழ்ச்சியாக நடமாடிய ஜீவன். சொற்ப நாட்களில் தனிமை, வெறுமை, தவிப்பு, அமைதியும் அந்தரப்பட்டவராகவும் காணப்பட்டார்.

இந்த வியப்பு நோக்கு நிலையில் 2008 பங்குனி மாதம் லண்டன் சென்றவர் நோய்வாய்ப்பட்டார் பின்பு மரணமடைந்தார். குடும்ப வாழ்வு இன்பமும் துன்பமும் கலந்தது. இவரது வாழ்வு ஒரு சில மாதங்கள் தனிமையும் துன்பமும் நிறைந்தவையாகவே இருந்தது! இப்பெரும் இரகசியமான தாக்கமே உயிர் உடலை விட்டுப் பிரியும் கட்டமாகி விட்டது.

உரும்பிராயில் வாழ்ந்த காலத்தில் யாழ் இந்துக்கல்லூரியில் கல்வி கற்றவர். சொக்கன் என்கிற திரு.கா. சொக்கலிங்கம் கையால் குட்டுப்பட்டுப் பயின்றவர். ஈழத்து இலக்கிய உலகுக்கு அருமையான கலைப் பொக்கி சங்களைத் தந்த சுடரொளியின் வீச்சில். கற்ற கல்வியும் இலக்கியத்தகமையும் திரு.சிவலிங்கம் சிவபாலனுக்கு உந்து சக்தியாகத் திகழ்ந்தமைக்கு நாம் அதிஷயப்படத் தேவையில்லை.

இலக்கிய இலக்கணத்தில் ஊக்கமும் ஆக்கமும் உடையவரான திரு.சிவலிங்கம் சிவபாலன் (1970) களில் பிறந்த மண் உரும்பிராயில் தேன்மலர் என்னும் சஞ்சிகையை வெளியிட்டார். இக்கலை வெளிப்பாட்டுடன் நாடகக் கலையின் மீதும் நாட்டம் கொண்டவர். நாடகங்களை எழுதும் நிலைப்பாட்டிலும் அக்கறையோடு இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வடிவத்தை செயல்ப்படுத்தும் நிலைப்பாட்டில் பலவித தடங்கல் ஏற்பட்டதால். அந்நாடகங்களைப் பின்னாளில் பிரான்ஸில் எழுதி மேடை கண்டவர். இதில்க் குறிப்பிடத்தக்க நாடகமாக (அப சுரங்கள்) நாடகம். இந்நாடகம் மறைந்த கலைஞன் கிறகிரி தங்கராஜாவின் நெறியாள்கையில் மேடை கண்டது குறிப்பிடத்தக்க விடையம். (1985) களில் பிரான்ஸ் மண்ணிலக் காலடி எடுத்து வைத்தவர் ஒரு காலில் புழுதி மண்ணும் ஒரு காலில் செம்மண்ணும் ஒட்ட ஓடியாடி விளையாடி தேசமும் மக்களும் பற்றி நினைவிலேயே வாழ்ந்தார்.

அந்த உணர்வின் ஓட்டத்துடனே ஐந்து விரல்களுக்குள் ஆறாவது விரலை நிமிர்த்தினார். ஈழநாடு, ஈழமுரசு,பாரிஸ் முரசு, தினகரன், வீரகேசரி, தினக்குரல் கணையாழி, குமுதம், எரிமலை, புதியபார்வை, சுபமங்களாவென பலதரப்பட்ட வெளியீடுகளில் படைப்புக்களை எழுதிக் குவித்தார். அப்பால்த் தமிழ் வெளியீடான (பாரிஸ் சிறுகதைகள்) என்னும் நூலில் சிவலிங்கம் சிவபாலன் எழுதிய மலர்வு சிறந்த கதையாகத் தெரிவுசெய்யப்பட்டு பிரசுரிக்கப்பட்டது குறிப்படத்தக்கது.

பிரான்ஸில் ஆரம்பகால தமிழ் எழுத்தாளர்களில் முதல் மின்னித் தெறித்த எழுத்தாளராகவும் சிவலிங்கம் சிவபாலன் உள்ளார்.

கவி கதைகள் மூலமாகக் காலடி எடுத்து வைத்தவர் சிறுகதைகள், கட்டுரைகளில்த் தனித்தன்மை வாய்ந்த வீச்சுடன் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சிறந்த எழுத்தாளராக மிளிர்ந்தார். இதனடிப்படையில் அறிவாக்கக் கருத்துக்கள் கொண்ட படைப்புகள் தோன்றின. பல்வேறு உருவாக்கக் கருத்துக்களைக் கொண்ட கலையுள்ளங்களோடு பழகும் மனப்பக்குவம் கொண்டவர்.

சிறப்பாகச் சிந்திக்கும் ஆற்றலும் ஆழுமையும் மிக்கவராக விளங்கினார். கவிதையுடன் படைப்புலகுக்குள் காலடி எடுத்து வைத்தவர். தேசத்தின் நேசமும், ரோசமும், கூர்மையும், முனைப்பாக நிமிரும். என் பார்வையில் ஆறாம் மாதம் 2005ம் ஆண்டு கணையாழி மூன்று கவிதைகளை பிரசுவித்து மகிமைப்படுத்தியது. கவிதைகள் நல்ல தரமும் நிமிர்வும் இருந்ததை நான் இன்று மறக்க முடியாதிருக்கிறது!

அன்றாட வாழ்க்கையில் போராடிக் கொண்டிருக்கின்ற மக்களையே முக்கியப்படுத்திய சிறுகதைகள் ஐம்பதுக்கு மேல்ப்பட்டவை சிறந்து விளங்குகின்றன. தமிழீழ மக்கள் மீது மிகுந்த பரிவும் பற்றும் யோசிப்பும் கொண்டிருந்தவர். குடும்ப பாசம் மிக்கவர்கள் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியரை வணங்கிப் போற்றக் கூடியவர்கள். இவற்றைத் தனது நடவடிக்கைகளிலும் எழுத்திலும் பதித்திருந்தார். குறிப்பாகச் சிறுகதைகள் அனைத்திலும் இவற்றைக் காணலாம்.

இவரது சிறுகதைத் தொகுப்பான “சுரங்கள்மாறி” படைப்புக்கு நான் அணிந்துரை வழங்கியிருக்கின்றேன். இன்றைய காலகட்டத்தில் அதன் பெருமை என்னையும் பெருமை கொள்ள வைக்கும். பதின் நான்கு சிறுகதைகள் அத்தொகுப்பில் அடக்கம். திரு.சிவலிங்கம் சிவபாலன் தன்னுரையில் இப்படியாக எழுதியிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு மாற்றத்தை எண்ணியே மனிதன் முகாரியை மறந்து, புதிதாய் ஒரு இராகம் புனைய முயல்கின்றான். கடந்தவை என்றுமே ஈழத்தமிழனுக்கு கறைபடிந்த காலங்களே"...!

என்று முகாரிக்கு விளக்கமளித்தவன் லண்டனில் முகாரிக்குச் சொந்தமாகிப் போனான். சோகம் மட்டுமே வாழ்வு அல்லவாம் என்றவன். சோகத்துடனே கடந்து சென்றுவிட்டான். அடக்கத்தின் பிறப்பாய் தன் திறமைகளை மிகக்கடினமான சொற்களால் அடக்கமாகக் கூறவும் திரு. சிவலிங்கம் சிவபாலன் தவறவில்லை.

இலக்கியம் என்ற சமுத்திரம் எனக்கு முன்மை முத்துக்களைத் தேக்கி வைத்திருக்கின்றது. மூச்சுப்பிடிக்கப் பயந்து முத்துக் குளிக்க முடியாமல்த் தவிக்கின்றேன். இப்படிக்கூறி அமைதியோடு அறிவார்ந்த கருத்துக்களோடு நடமாடிய நல்ல படைப்பாளி சமூகத்தின் அடிப்படைப் பிரச்சனைகளையே தொட்டுப் பொட்டு வைத்தவன். இன்று நம்மிடையே இல்லையா?

"வாழ்வா சாவா என்ற நிலையில் என் உறவுகளிடம் அதிகாரம் அத்துமீறிப் பிரவேசிக்கப்படுகின்றது. ஆனந்தப்படவா முடியும். என்னை ஆத்திரம் எரிமலைக்குள் இழுத்துச் செல்கின்றது. இதை விடுத்து எதை எழுத? என் தேசம் துளிர்க்கட்டும். துள்ளி விளையாடிய புளிதிமண் தேசம் கற்பகத்தருக்களால் நிறைந்து நிற்கும். என் தூரிகையும் துள்ளி விளையாடும்".

என்று தனது சுரங்கள் மாறிய சிறுகதைத்தொகுப்பில் கூறியிருக்கின்றான். அத்தகைய நிமிர்ந்த தூரிகையும் பாடையில் படுத்து விட்டது. (சோகம் மட்டும் வாழ்வல்ல) என்றவன் கலையுள்ளங்களைச் சோகத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்து விட்டான். மிகப்பெரும் கவலைக்குரிய சம்பவம் இரகசியமாகவே போய் விட்டது.

சீனத்துப் புரட்சியின் சிந்தனைச் சிற்பி. ஒன்றுபட்ட சீனக்குடியிருப்பைக் காணாமலே கண்மூடிய அந்த மாமகனார் "சன்யிட்சன்" இறுகச் சொன்ன வாக்கு.

"நமது தேசத்தைக் காக்கப் போராடுங்கள்
அமைதி உண்டாகட்டும்"

இவ்வார்த்தைகளை அதிகம் நேசிப்பவனாக இருந்தவன். அவன் இல்லை என்பதை நினைக்கும்போது அவன் இழப்பை நான் உணரும்போது சிவபாலனைப்பற்றிய வரிகளை இன்றும் என்றும் இன்றிரவும் எழுதுவேன் மறவாதிருக்க!

பிரான்ஸில் சிறப்புக்குரிய படைப்பாளியாகத் திகழ்ந்த சிவபாலனின் அமைதி தவழும் முகம் மறைந்து விட்டாலும், அவர் நமக்குத் தந்து விட்டுப் போன கலைப்படைப்புக்கள் பேசும். சுரங்கள்மாறி சிறுகதைத்தொகுப்பு நூல் வெளியிடப்படவுள்ளது. 22.06.2008 ஞாயிற்றுக் கிழமைக்குப் பின்பு சிவபாலனின் காத்திரமான படைப்பென்று தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும்

**மா.கி.கிறிஸ்ரியன் (பிரான்ஸ்)**
கவிஞர், கலை இலக்கிய விமர்சகர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னை விரும்பும் பூமியிலே!

(சிறுகதை)

**சிவலிங்கம் சிவபாலன்**

ஒவ்வொருவராக எண்ணிப் பார்த்தாலும் ஒரு ஐம்பதுபேர்தான் தேறுவர். யாவரும் கறுப்பு உடைதான் அணிந்திருக்கிறார்கள். சில பெண்கள் கறுப்புக்கண்ணாடியும் அணிந்திருக்கிறார்கள். தங்களுக்கு அழுகை வரவில்லையே என்பதை, மற்றவர்கள் தெரிந்துகொள்ளக்கூடாது என்பதற்காகக் கறுப்புக் கண்ணாடி அணிந்திருக்கிறார்களா? அல்லது தங்கள் கண்களும் அழுதுகொள்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதற்காகவா என்பதை திரணமாக அறிந்துகொள்ள என்னால் முடியவில்லை. எல்லோருடைய முகங்களிலும் ஒருவித சோகம் குடிகொண்டிருந்தது என்பதை மட்டும் என்னால் அப்போதைக்கு உணரக்கூடியதாக இருந்தது. தேவாலயத்தில் நடைபெற வேண்டிய கிரிகைகள் யாவும், அதாவது திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, "ஆர்தர் முலேரியர்" அவர்களது திதவுடலைத்தாங்கிய கருஞ்காலிப்பேழை வண்டியில் ஏற்றப்பட்டுவிட்டது. அது உண்மையிலேயே கருங்காலியினாலானதா? அல்லது அதுபோன்ற வணணப்திச்சா என்பதுவும் என்னளவில் தெளிவில்லை. ஆனால் விலையுயர்ந்த பேழைதான் என்பது மட்டும் உண்மை. ஆர்தருடைய துணைவியார் "கிளோரா பொற்றாக்கீன்" ஐக் கண்கொண்டு பாாக்க இயலவில்லை. சோகத்தின் உச்சிக்கே அவர் சென்றுவிட்டிருந்தார். நகரின் எல்லைப் புறத்தில்தான் விண்ணையிடிக்கும் கோபுரத்துடன் இந்த "புனித மாத்தாள்" ஆலயம் பிரசித்தி பெற்று விளங்குகிறது. இயற்கையின் சீற்றம், பேரழிவுகள் என்ற திகம்பங்களின் பின்னும் இந்தத் தேவாலயம் அன்றைய பழமையின் அத்தனை எழிலுடன் இன்றும் காட்சி தருகிறதென்றால்! அதன் புனிதத் தன்மையை என்னவென்று சொல்ல? அதன் முன்புறத்தே பரந்து விசாலமாக விரிந்திருக்கும் நந்தவனத்தையும், அதனைச்சுற்றி அமைக்கப்பட்டிருக்கும் மர ஆசனங்களையும், மின் கம்பங்களையும், மிக அழகாக கூடைபோல் வெட்டப்பட்டிருக்கும் "செதேரே" (Cedre) மரங்களையும், புல்வெளிகளையும், செழித்து வளர்ந்திருக்கும் "ரோஜா" மணிவாழை, "பார்பட்டன்" போன்றவற்றின் இடையேயான சீமெந்துத் தரையையும், அதன் சூழலையும் மணிக்கணக்கிலென்ன! நாட்கணக்கில் பார்த்துக்கொண்டிருக்கலாம்.





கோடையென்ன, பனியென்ன மாலை மூன்றுமணியாகிவிட்டால் யார் வருகி-றார்களோ இல்லையோ ஒருவர் கரத்தை மற்றவர் இறுகப்பற்றியபடி "ஆர்தர்-களோரா" தம்பதிகள்அழகுகுக்கு அழகூட்டும் அதியுயர் ஆடையணிந்து வந்திருப்பர் என்பது இயற்கையின் விருப்போ என்னவோ?! அவர்கள் அமர்ந்திருக்கும் மர ஆசனத்தைச் சுற்றி சிலநூறு புறாக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் சிந்தப்படும் தானியங்களை உண்டு மகிழும். பலநூறு மொய்னியாக் (Moineau) குருவிகள் அவர்கள் தோளிலும் தலையிலுமாக மாறிமாறி அமர்ந்து இதம் தேடும். அந்தக் காட்சிகளைக் காணவே கோடைக்காலத்தில் பொழுதுகூட இரவு பத்துமணியையும் தாண்டித் தேயாமலிருக்கிறதோ! என்று நான் அடிக்கடி எண்ணுவேன். மனதுக்கும் தேகத்திற்கும் ஒருவித இதந்தரக்கூடிய அந்தப் பொழுதின் ஒவ்வொரு நிமிடங்களும் வாழ்க்கையில் அதை அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். ஆர்தர், கிளாரா என்ற அந்த இளைஞனும், யுவதியும், வயதுதான் அவர்களுக்கு எண்பத்தியிரண்டும், எழுபத்தயைந்தும். ஆனால் காதலர்களாகத் தெரி-வார்கள், தம்பதிகளாகத் தெரிவார்கள் நண்பர்களாகவும் தெரிவார்கள்.. ஒருவேளை தெய்வங்களாகக் கூட இருக்கலாம். மனிதத் தெய்வங்களாக இருக்கலாமல்லவா. அவர்களுடைய பேச்சு, பார்வை மற்றும் குணவியல்புகளை வர்ணிக்கவும் விதந்துரைக்கவும் ஒரு பல்கலைக்கழகமே தேவைப்படலாம். அவர்களது மென்மையான உணர்வுகளை திரைப்படங்களில்கூடக் காணமுடியாது. அவர்களுடன் பழகவேண்டும் என்பதற்காகவே நான், அந்த மாலைப் பொழுதுகளை நான் நன்கு பயன்படுத்தியிருக்கிறேன். சன்னி வந்து போர்த்து மூடிக்கொண்டு படுக்கவேண்டிய நிலை வந்தாலுங்கூட, அவர்களைப் பார்க்கவேண்டுமென்று நினைத்தவுடன் எல்லா நோயும் பஞ்சாய்ப் பறந்துவிடும்.

என் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு, அந்தப் பொழுதில் சங்கமிக்க நான் சென்றதும் அவர்களிடமிருந்து வரக்கூடிய முதற்கேள்வி "என்ன இன்று பிந்திவிட்டீர்கள்?" எனபதாகவே இருக்கும். அவர்களுக்குப் பதில்கூற எனக்கு மிகச் சங்கடமாகவிருக்கும். சுருக்கமாகச் சொல்வதென்றால் அவர்களுக்கு அவர்களுடைய இருப்பைப் பற்றிய இன்றைய, நாளைய கவலைகள் ஏதுமில்லை. எனக்கு அப்படியில்லை. "தேவை" என்பதற்காய் "தேடலின்" ஒவ்வொரு விநாடியும் நான் ஆலைக்கரும்பாய்ப் பிழியப் படவேண்டிய நியதி எனக்கிருக்கிறது. அதையெல்லாம் அவர்களுக்கு எப்படி விபரிப்பது. "அரசன் நினைப்பானாம் அயல் மக்களும் தன்னைப்போலவேயென்று" மன்னன் நினைப்பு தன்போன்ற வாழ்க்கை வசதிகளுடனேயே மற்றவர்களும் வாழ்கிறார்கள் என்று. இவர்கள் தங்கள் நிலையிலேயே என்னையும் எண்ணிக் கொள்கிறார்களோ என்று நினைப்பேன். என் படபடப்பு யாருக்குத் தெரியும். என் பிள்ளைகளுடன் அனேகமானவற்றைக் கதைப்பார்கள். கதைகேட்டுச் சிரிப்பார்கள். அந்த வேளைகளில் இவர்களும் மனதளவில் குழந்தைகளே என்று நான் கண்டதுண்டு. ஒருமுறை அவர்கள் யாரையாவது கேள்வி கேட்டார்களாயிருந்தால் அடுத்த கேள்வியாக எதையும் கேட்க மாட்டார்களா என்று என்று மனம் ஆவல் கொள்ளும் நிலையை உருவாக்கும் வசீகரம் கொண்டவர்களாகவே எனக்குத் தோன்றினார்கள். தோன்றுகிறார்கள். நாங்கள் இந்த நாட்டிற்கு வரவேண்டிய தேவை எதுவென்று என்னிடம் ஒருமுறை கேட்டார்கள். என்னால் முடிந்தவரை விபரமாக "அது தேவையல்ல, கட்டாயம்" என்று விபரித்திருந்தேன். பொறுமையாகக் கேட்டார்கள். பின் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். மனதில் என்ன நினைத்தார்களோ தெரியாது. "நீங்கள் தானே அளவுக்கு அதிகமான மதப் பற்றுடையவர்கள், உறவுகள் மீது அதிக பாசம் உடையவர்கள், அப்போ. ?! எது உங்களை விரோத-ிகளாக்குகிறது."அதே மதப்பற்றும், அதே பாசப்பற்றும்தான்" என்றேன். "எங்கள் மதம் எங்களுனக்குப் பெரிதாகத் தெரிகிறது. அது போலவே அவர்களுக்கும் எங்கள் உறவுகள் மீதான பாசம், முன்னேற்றம் எங்களுக்கு எப்படியோ, அதுபோலவே அவர்களுக்கும், சற்று அதிகமாகவே என்றேன். என்னைப்பற்றி அவர்கள் என்ன நினைத்தார்களோ? ஆயிரம் கேள்விகளுடனேயே அவர்கள் என்னைப் பார்த்தார்கள் என்பதே உண்மை. இப்படியேதான் தொடர்ந்தது எங்கள் உறவு. எது எப்படியிருந்தாலும், எங்களுக்குள் இருக்ககூடிய குணவியல்பு "திராயம்" விசாரிப்பது. நாங்கள் திறமோ இல்லையோ! மற்றவர்களைப்பற்றித் தெரிந்துகொள்ளுவது. கல்தோன்றி மண்தோன்றா காலத்து முன்தோன்தோன்றி மூத்தகுடிகளல்லவா. எம்மைப் படைத்தவனே வந்து அதை நிறுத்தச் சொன்னாலும் அவனையும் எங்கள் படிக்கே இழுத்துக் கொள்ளக்கூடிய வல்லமை உள்ளவர்களல்லவா.

நானும் திர்வீகம், சொத்துச்சுகம், குலங்கோத்திரம் விசாரிக்கத்தான் செய்தேன். ஆர்தரின் பிறப்புரிமை கிழக்கு அய்ரோப்பா. எங்களைப்போலவே காப்பரண்கள் முள்ளுக்கம்பி வேலிகள்மேற் பாய்ந்து, மேயும் செம்மறி ஆடுகளுக்கிடையே தானும் போர்வையைப்போர்த்தி, ஈயச்சன்னங்களுடைய பார்வையிலிருந்து தப்பி, அவற்றின் கழுகுக் கண்களில் மண்ணைதூவிவிட்டு இங்கு வந்து சேர்ந்தவர். எதுவித உதவிகளோ, மருத்துவச் சலுகைகளோ, படிக்க உதவிகளோ இல்லாமல், குளிர்காலத்தில் எரிக்கும் காட்டுமரம் வெட்டியாகக் கூலிவேலை செய்து தன் உயிரை உடலில் வைத்துக்கொண்டவர். அவர் இறக்கும் நிமிடம் வரை, அவருடைய தாய் தந்தையர், தொப்புள்கொடி உறவுகள் பற்றிய எதுவித தகவல்களும் இல்லாமல் மனத்தைக் கரைத்துக் கொண்டவர். பெற்றோர் உறவினர் இருந்தும் கடிதம் எழுதத் தெரியாது. அவர்களுடைய வதிவிடம், முகவரி தெரியாது. அப்படியான குளிரின் நெருப்புச் சூழலில் அவர் மறைந்து வாழ்ந்தது குதிரைலாயத்தில்தான். தனது ஏழாவது வயதில்தான் முதன்முதலில் படிக்க ஆரம்பித்ததாகச் சொன்னபோது எனக்கு மனது சற்று இளகிக்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்தர் படிக்க ஆரம்பித்தது தான் முன்னுக்கு வரவேண்டும் என்பதற்காக அல்ல. தான் பெறும் கூலி எவ்வளவு என்று தெரிந்துகொள்ளவும், மீதி எவ்வளவு கொடுக்க-வாங்க வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ளுவதற்காகவும்தானாம். ஏழுபேர் படிக்கும் ஓர் கொட்டகையில் தானும் எட்டாவது ஆளாகச்சேர்ந்து உள்ளங்கையளவு பாணை இரண்டுவேளைக்குப் பசியாற்றி வாழ்ந்தகாலத்திலேயே தனது பன்னிரண்டாவது வயதில் "கிளேரா பெற்றாக்கீனி" என்ற பொன்னிற முடிகொண்ட சிறுமியைப் பார்த்தேன் என்றபோது அந்த அம்மையாரின் விழிகள் பட்டபாட்டை உண்மையிலேயே விபரிக்க முடியாது. அதை விபரிக்க ஒரு தனி அனுபவம் வேண்டும். அய்ரோப்பியரின் வாழ்வியல் நாட்டங்களில் இப்போதுவரை பதின்மூன்று வயது வந்த சிறுமி என்பதைக் காட்டிலும் யுவதி என்றே சொல்லலாம். தனது வயது வந்த நண்பனைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, யாருடைய அனுமதியும் ஒப்புதலும் இல்லாமல் குடித்தனம் போய்விடுகிறார்கள். நண்பனின், நண்பியின் போக்குகள், விட்டுக்கொடுப்புகள் இசைவாக இருந்தால் குடித்தனவியலும் தொடரும்.

இல்லையேல் அடுத்தநாளே அறுந்துகொள்ளும். ஆயிரத்தில் இலட்சத்தில் ஒன்று தொடர்ந்துமிருக்கிறது. அப்படியான ஒரு சூழலில் சிக்கித் தவித்து நண்பர்களாக, ஆயிரம் லட்சத்தில் ஒருவராக இற்றைவரை மிளிர்ந்தவர்கள் இந்த "ஆர்தர் முலேரியா-கிளேரா பெற்றாக்கீனி" ஆகிய காதலர்கள். ஒருமுறை ஆர்தர் "மனிதனை மனிதன் பிரிப்பதும், ஆசைகளை ஆயுதம்காட்டி மறுப்பதும் எவ்வளவு கொடுமை. என்றைக்கு இந்த இரண்டும் உலகில் இல்லாமல் போகிறதோ, அன்றைக்கு இந்த உலகம் இல்லாமல் போய்விடும்" என்றார். எனக்குப் புரியவில்லை. "நீங்கள் சொல்லியதை எனக்குப் புரிய வைப்பீர்களா?" என்றேன். "உலகம் எத்தகையது" என்று கேட்டார். குரங்கு பிடிக்கப்போய் எதோ வந்ததான நிலையில், இந்தக் கேள்விக்கு நான் எதைச்சொல்ல. பேசாமல் தலையாட்டியிருக்கலாம் என்று தோன்றியது. "உலகம் ஐந்து கண்டங்களாலானது, கடலால் பிரிக்கப்பட்டிருக்கிறது" என்றேன் எனது அரிவரிப் பாடவிதானத்தின்படி. "உலகத்தை ஐந்து கண்டங்களாகக் கடல் பிரித்தது என்று யார்சொன்னார்? உலகத்துக்குள் கடல் புகுந்துகொண்டது. (அதாவது சமுத்திரம்) கண்டங்களாகப் பிரித்தது மனிதன்தானே! கடவுளோ, கடலோ அல்லவே. அன்றையமாலை அப்படியே இருந்திருக்கக்கூடாதா என்று நினைத்தேன். எவ்வளவு தத்துரூபமான அறிவியல் ஞானி அவர். எனவேதான் அவர் அதிகம் பேசுவதில்லையோ என எண்ணிக்கொண்டு, அவரது சொற்றுளிகளுக்காகவே காத்திருந்தேன். உலகம் எல்லைகளால் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் மக்களும், ஆறுகளும், மலைகளும் மற்றும் வாயுவற்ற திண்மம், திரவமாகவும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.இத்தனைக்கும் தன்னைச்சுற்றி வட்டம் போட்டுக்கொண்ட மனிதன் மற்றவனையறியால், மற்றவனுடைய எண்ணத்தை மதியாமல் சுயநலப்போக்கிலேதான் வாழ்கிறானாம். எனவேதான் உலகம் என்பது கொடுங்கோன்மையானவரின் கூடாரமாக மாறிவிட்டதாம்.

இத்தகையவர் இல்லாமலே போய்விட்டால் "ஆர்தர்" நோக்கும் இந்தச் சுயநலப்போக்கரின் உலகம் இல்லாமலே போய்விடுமாம். இதுவென்ன முடிகிற காரியமா? உலகில் வாழும் புத்தி ஜீவிகளின் எதிர்பார்ப்பு ஒருவேளை அப்படியிருக்கலமாக்கும் என எண்ணி என்னை அமைத-யாக்கிக் கொண்டேன். "கிளோரா"விற்குப் பன்னிரண்டு வயதானபோது, இருபத்தைந்து வயதான தோற்றமும், நிறைந்த அறிவுடையவர் போன்ற மனப்பக்குவமும் கொண்டவராகத் தன்னால் உணரக்கூடியதாக இருந்ததாகச் சொன்ன "ஆர்தர்" ஒருவேளை அந்த நேரத்தில், தனது முற்றுமுழுதான சோகத்தையே வாழ்க்கையாக்கிக் கொண்டிருந்தபோது கிளோரா கிடைக்கமால் விட்டிருந்தால் தான் எப்படியெல்லாம் சீரழிந்திருப்பேனோ என வியப்பாக இருப்பதாகச் சொன்னார். "அப்படியென்றால் கிளேராவை திருமணஞ்செய்ய எப்போது முடிவெடுத்தீகள்?" இது நான். அதாவது கிளேராவின் பதின்முன்று வயதில் கிளோராவின் குடும்பப் பின்னணியும் படு பயங்கரமானதொன்று. கிளோராவின் பெற்றோர்கள் விவசாயிகள். கிளோராவிற்குப் பத்துச் சகோதர-சகோதரிகள். வறுமை காரணமாகவும், கொடிய நோயொன்றின் காரணமாகவும் கிளோராவும், அவரது சகோதரி ஒருவரும் மட்டுமே உயிர்தப்ப நேர்ந்ததாம். அவ்விருவரையும் அந்த நாட்களில் ஊரவர் உறவினர் யாரும் ஏற்க, பழக மறுத்துவிட்டார்களாம். காரணம் ஒரு கொலைகாரனின் பிள்ளையைத் தத்தெடுக்க ஊரவர் விரும்பாதது போலவே, கொடிய நோய்க்கு இரையான குடும்பத்திலிருந்து வந்தவள் என்ற அர்த்தத்தில் கிளோராவையும், அவரது தங்கையையும் யாரும் தொட்டுப் பார்க்கூட விரும்பாத வேளையில், இருவரும் கிராமத்தைவிட்டே விலகி, புலம்பெயர்ந்து வேறொரு நகருக்குக் கால்நடையாகச் சென்று, கத்தோலிக்க மதபோதகர்கள் தங்கும் இல்லத்தில், உணவுக்காக ஒதுங்கிக்கொண்ட வேளையில், அதாவது ஐந்து வயதில் ஆர்தருடைய கண்ணில் பட்டவர்தான் இந்த கிளோரா அம்மையார். அதிகாலை ஐந்து மணியில் இருந்து மாலை ஏழு மணிவரைவேலைசெய்ய ஆர்தர் பணிக்கப்பட்டார். அதற்காக அவருக்கு வழங்கப்பட்ட ஊதியம் பன்றி இறைச்சியில் வாட்டப்பட்ட ஒரு துண்டும், பாண் ஒரு துண்டும் மட்டுமே. மாலையில் மரக்கறி அவித்த கூழ், அல்லது கஞ்சி அவ்வளவுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முன்னோர்கள் கூறுவார்கள், அதிகாலை மூன்றுமணிக்குத் துலாவில் ஏறினால் தோட்டத்திற்கு நீரிறைத்துவிட்டு இறங்கும்போது காலை எட்டுமணியாகிவிடும். பின் ஓடியற்பிட்டோ, குரக்கன்கூழோ எதிலாவது பசியாறி, நெஞ்சில் புத்தகத்தைக் கட்டிக்கொண்டு வேட்டி தடக்க ஓடி ஒன்பது மணிக்குப் பாடசாலையில் நிற்க வேண்டும். இரண்டு மணிக்குப் பாடசாலை முடித்துவிட்டு வந்து வரகரிசிச் சோறு, அல்லது கம்பரிசிக்கூழ் அருந்திவிட்டு மாலை மூன்றிருந்து ஏழுமணிவரை துலாவும், நீருறைப்பும்தான். அப்படிப் படித்துத்தான் "கிளரிக்கல்" என்றும் "மெற்றிக்குலேசன் சோதனை" என்றும் நாங்கள் படித்த படிப்பென்ன? என்று மார்தட்டும் எம்மவரின் நிலை என் மனத்தில் நிறைந்தது.அன்றைய எம் முன்னவர்கள் பட்ட பாட்டைப்பற்றியும், அவர்களுடைய கடுமையான உழைப்புப் பற்றியும் ஆர்தருக்கு விளக்கவேண்டும்போல இருந்தது. ஆடுகால், திவரசு, அச்சுலக்கை, மிதிபலகை, பனையேபாலைப் பட்டை, துலா, துலாக்கொடி, துலாக்கல்லு. . . . எதிலிருந்து ஆரம்பிப்பது?

பிள்ளைக்குத் தொண்டையில் பால் விக்கிய கதையை கண் தெரியாதவனுக்கு விளங்கப்படுத்த, கண்தெரியாதவன் பால் எப்படி இருக்கும் என்று கேட்க, பதில் சொல்பவர் பால் வெள்ளை என்று பதில் சொல்ல, மீண்டும் வெள்ளை எப்படி இருக்கும் என்று கண்தெரியாதவன் கேட்க, கொக்குப்போல் இருக்கும் என்று அவர் சொல்ல, மீண்டும் வெள்ளை எப்படியிருக்கும் என்று கேள்வி தொடர பதில் சொன்னவன் அவன் கையை வளைத்து இப்படி இருக்கும் என்றபோது தன் வளைக்கப்பட்ட கையை மறுகையால் தடவிப்பார்த்துக் கொண்ட கண்தெரியாதவன் இது தொண்டைக்குள் சிக்கினால் பிள்ளை எப்படித் தப்பும் என்ற கண் தெரியாதவனின் நிலையாக நாங்களிருவரும் மாறாமலிருக்க நான் என்னை அடக்கிக்கொண்டேன்.தெளிந்த நீரோடையாக இருக்கும் ஆர்தரிடம் நான் கல்லெறிய விரும்பவில்லை.தனது வேலைகளை மாலை ஏழரை மணிக்குமேல் முடித்துவிட்டு அதே மதபோதகர்கள் படிக்கும் புத்தகங்களை விளையாட்டாகப் புரட்டிப் புரட்டிப் பார்த்துப் படித்து படிப்பின் மீதான ஒரு நம்பகத்தன்மையை தன் மனதுள் உருவாக்கி அதையே ஒரு சவாரஸ்ரீலாக ஏற்று தான் படித்துத் தெரியாய, விடயங்களை அதேவிடுதியல் தங்கியிருந்த முதியவர்களிடம் இருந்து கேட்டுத்தெரிந்து, தன் இடையறா முயற்சியினால் கழிமண் ஓட்டுத் தொழிற்சாலையை நிறுவி, கிளோராவும் தானும் கால்களும் கைகளும் சேறு மண்டிக்கிடக்க, சமைத்து உணவருந்த முடியாமல் பட்டினி கிடந்த நாட்களையும் சொல்லிக்கொண்டார்கள். அப்போதிலிருந்தே தாங்களிருவரும் மனமொத்து, திருமணமோ, சட்டரீதியானதோ அல்லது சமயரீதியானதோ பதிவுகள் எதுவும் இல்லாமல் இதுவரை வாழ்ந்து கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொள்ளும்போது அந்தக் காதலர்களின் உதடுகளும், கன்னங்களும் திரிப்புப் பிரவாகத்தில் மிதந்தெழும்.

கோடு, கச்சேரி, வைத்தியசாலை விதானைவீடு என்று எதுவுமே இவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதெல்லாம் எங்களிடம்தான். "ஆரெவன் எண்டு தெரியாமல் எனக்குப் பிறகாலை எடுபட்டு வந்தவள்தானையடி நீ" என்றும் எனக்குப் பிறகாலை பத்துப்பேர் திரிய, அப்பு கொண்டுவந்து உன்ர தலையிலை கட்டிவிட்டார்! இப்ப நான் கிடந்து சீரழியிறன் பார்." இவையல்லவோ வாழ்க்கையின் நடைமுறை வரிகள்.

இவர்கள் இருவரின் வாயில் ஏன் இப்படியான வர்த்தைகள். இவர்களுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். இருவரும் இராணுவத்தில் நல்ல நிலையில் இருந்தவர்கள் தாம். இருவரும் ஒரே இரவில் "மொசாம்பிக்" நாட்டில் எதிராளிகளால் கொல்லப்பட்டவர்கள். அவர்களின் முகத்தைக்கூட தாம் இறுதியாகப் பார்க்கவில்லையாம். அதைச் சொல்லும்போதே ஆர்த்தரின் கண்கள் பனித்துக் கொண்டன.

"பிள்ளைகள் நாட்டுக்குத்தானே உயிரைவிட்டவர்கள், குற்றவாளிகளாகவா உயிரை விட்டார்கள்" என்ற கிளோராவின் தைரிய வார்த்தைகளின் பின் ஆர்தர் அமைதியடைந்தார். இப்படியே இந்தக் காதலர்களாக, நண்பர்களாக, எழுத்துருவில் எவ்வித சான்றாதாரங்கள் இல்லாத கணவன் மனைவியாக வாழ்ந்து கொண்டவர்கள் பற்றியும், அவர்கள் வாக்குமூலம் பற்றியும், எழுதத் தொடங்கினால் பெரிய புத்தகமே எழுதலாம். ஓய்வு நாட்களின் போது பிள்ளைகளையும், மனைவியையும் கூட்டிக்கொண்டு தங்கள் வீட்டுக்கு வரும்படி அடிக்கடி கூறுவார்கள். போக விரும்பினாலும் நேரம் வேண்டுமே? இருந்தாலும் பெரிய மனிதர்கள் அழைக்கும்போது போய்வரத்தானே வேண்டும். நத்தார் பண்டிகையின்போது மாலை நான்குமணியளவில் நாங்கள் யாவரும் திங்கொத்து ஒன்றையும் கொண்டுபோனபோது வீடு இல்லை அவர்களது அரண்மனை சின்னஞ்சிறுசுகளால் தித்திருந்தது.

அச்சிறார்களுடனே இந்த ஆர்தர், சிளோரா சின்னன்களும் ஓடியாடி விளையடியது இன்னும் கண்ணுக்குள்ளே நிற்கிறது. அவ்வளவு பசுமை நினைவுகள். அவர்களிருவரும் தம் வாழ்வின் ஒவ்வொரு கணங்களையும், எந்த நம்பிக்கையில் ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்றே எண்ணத்தோன்றும். இருவரும் வயதானவர்கள். உறவினர்களும் இல்லை. வாரிசுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ இல்லை. என்ன கவலை? எதைப்பற்றிச் சிந்திப்பார்கள். வாழவேண்டும் என்பதுதான் இவர்கள் இலட்சியமோ? தெய்வாதீனமாக இருவரிலொருவருக்கு ஏதாவது நிகழ்ந்துவிட்டால். நினைக்கவே மனம் பதைபதைக்கிறது. மற்றவரால் அதை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும். என்னையே கேட்டுக்கொள்வேன். பின் "சீ அதுகளுக்கு அப்பிடி ஒண்டும் வராது" என்று சமாதானமாவேன். நான் பார்த்த அளவில் யாருடனும் நல்லதைப் பற்றியே பேசுவார்கள். அன்பாகவே பழகுவார்கள். நட்புரிமையுடன் நடந்து கொள்வார்கள். இதுதான் வாழ்வில் யாரையும் நெடுங்காலம் வாழவைக்கிறதோ என்று எண்ணுவேன். எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

எப்படியோ அந்த ஞானி, உழைப்பாலுயர்ந்த அகதி ஒரு மரப்பெட்டியினுள் அடைக்கப்பட்ட நிலையில் பிறந்தது எங்கோ, பயின்றது எங்கோ, வாழந்தது எங்கோ, என்று நிலையில்லா மனிதவாழ்வை மரணம் இறுதி அத்தியாயத்தை எழுதி முடித்து விட்டிருந்தது. ஆர்தரை நினைக்கும் போதெல்லாம் மனம் பதைத்துக்கொள்ளும். வாழ்க்கையின் தத்துவங்களாக இருந்த இரண்டு உருவங்களிலொன்று எங்கோ காணாமல் போய்விட்டது. நினைவுகள் மட்டுமே கண்முன்னே வந்து உருவங்களை நியாயப் படுத்திக்கொண்டே இருக்கிறது.





தேவாலய முன்னரங்கில் இப்போ ஒரு வெறுமையே காணப்படுகிறது. புறாக்களுக்கும், குருவிகளுக்கும் தானியங்கள் இப்போது கிளோரா அம்மையாரால் தூவப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அந்தப்பறவைக் கூட்டங்களுக்காகவாவது ஆர்தர் இன்னும் கொஞ்சக்காலம் வாழ்ந்திருக்கக்கூடாதா என்று மனது நோகிறது. ஆர்தர் யாவரையும் விட்டுப் பிரிந்து இரண்டு வாரங்கள் எப்படியோ ஓடித் தொலைந்துவிட்டது. கிளோரா அம்மையாரை பார்த்து துக்கம் விசாரிக்க வேண்டும், அவரது கனத்த மனதுக்கு ஆறுதல் வார்த்தைகளால் ஒத்தடம் கொடுக்கவேண்டும் என்பதற்காக எவ்வித முன்னறிவிப்புகளும் இல்லாமல் போய் கதவு மணியை அழுத்தியதுதான் தாமதம். கிளோரா என்ற தனித்த உருவம் மெள்ள அடிவைத்து நடந்து வந்த கதவைத் திறந்தது. அதே புன்னகை, கண்களிலிருந்து அதே ஒளிவீச உள்ளே வரும்படி வரவேற்றது. அந்த மாளிகையின் அமைதி, நான் பார்த்த இடமெல்லாம் ஆர்தரின் மார்பளவுப் புகைப்படங்கள், கூடவே மெழுகுவர்த்தி மற்றும் வாடாத மலர்க்கொத்துக்கள் என நிறைந்திருந்தன. கண்கள் பனித்து எனக்கு வார்த்தைகளே வரவில்லை. எதைப்பேசுவது, எதைக் கேட்பது, வழமையான குசல வார்த்தகள், எதிர்பார்த்தபடியே பதிலும் வந்தது. உடம்பெல்லாம் என்குப் புல்லரித்தது. "எனக்கென்ன குறை. என்னுடைய ஆர்தர் எனக்குள்ளே வாழ்கிறார். நேற்றைப் போலவே இன்னும் அவர் அன்பு என்னை வழிநடத்திச் செல்கிறது. அவர் நிறைந்திருக்கும் இடத்தில் எனக்கும் இடம் உண்டு. அவருடைய வீட்டுக்குள் நான் போய்விட்டால் நானும் ஆர்தரும் மீண்டும் மிகுந்த மகிழ்ச்சியுடனே இருப்போம்" யாருக்கு வரும் இந்த மனப்பலம். மறுபிறப்பென்பது பொய். இந்தப்பிறப்பே உண்மை என்று அடித்துச்சொல்லும் விஞ்ஞானத்தின் கரையில் இருந்து மீண்டும் தாங்கள் சந்திக்கப்போகும் உறுதியுடன் கடைசிக் காலங்களைக்கழிக்கும் கையெல்லாம் நீலநரம்புகள் தெரியும் "கிளோரா பெற்றாக்கீனி அம்மையாரிடமிருந்து அப்போதைக்கு என்னால் விடைபெறத்தான் முடிந்தது. வேதனையோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகரின் ஒரு மாலைப்பொழுதைப் போல்

நீயிருந்த மாநகரம்
இருளில் ஒரு மலைப்பாம்பைப் போல படுத்துக்கிடக்கிறது
கவலைமிகக் கொண்டிருந்தேன்
ஒரு உலாப்போனேன்
வழியில் வசந்தகாலப் பட்சிகளைக் கண்டேன்
பாடும்படி கேட்டேன்
மனதையாற்ற வேறு ஒரு மாயமும் தெரியவில்லை

உள்ளத்தோரம் தீப்பற்றி எரிய - ஒரு தோணி கொண்டு
வலித்தவனைப்போலவுமான
உன்னைப்பற்றித்தானடா ஒரு பாட்டாவது கேட்டேன்.
மாலைச் சூரியன்
மாடமாளிகைகளின்
சாளரங்களில் வீழ்ந்து தேம்பி அழுதுகொண்டு போயிருக்கக்கூடாது

ஆனால்
அவன் அப்படித்தான் போனான்
உனதும் ஞாபகங்கள் அவனுக்குள்ளும்
ஏன் மூளக்கூடாது?
பறவைப் பொந்தில் பாம்பு கொத்தி மாண்டதைப் போல
போய்விட்டாயடா!
பறவைதானே கொத்துது
கொத்தட்டும் என்று இருந்துவிட்டாயாடா?

ஒருநாளேனும்
நரம்புகள் அறுந்த வாத்தியம் போலுமான கதையை
நான் அறிந்தேனில்லை
வண்ணத்திப்பூச்சிகள் முட்களில் வீழ்ந்து
இறக்கைகளைக் கிழித்துக்கொண்டதைப்போல
நீ துடி துடித்திருக்கிறாய்
நான் அறிந்தேனில்லையடா!

மாநகரின் ஒரு மாலைப் பொழுதைப் போல
நீ உதிர்ந்து போய்விட்டதறிந்து
உறைந்து ஒரு சிலை போலும் நின்றேனடா
லாச்சப்பல் தெரு
உனது முகத்தையும்
உனது சுவடுகளையும்
ஞாபகம்கொள்ளுமென்று
நீ கனவிலும் கருதியிருக்கமாட்டாயென்று எனக்குத் தெரியுமடா!

பிறகென்ன நீ பயணப்பட்டுக்கொண்டு போனாய்
சட்டையைக் கழற்றி விட்டு
இனி இந்தப்பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டேன்
என யார் யாரோவுக்கெல்லாம் சொல்லிச் சென்ற நீ
என்னை மறந்துபோனாயாடா?

சமூக ஆர்வலர், கவிஞர்
**தா. பாலகணேசன் (சுபாஸ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமனித ஒழுக்கநெறியின் 'றோல்மொடல்"

## நண்பன் சிவலிங்கம் சிவபாலன்

மனித வாழ்விலே நிரந்தரமென்று எதுவுமேயில்லை. ஆனால் அந்த வாழ்வின் நிரந்தரமான ஒன்றென்றால் அது மரணம். ஆனால் எங்களுடன் நெருக்கமானவர்கள் மற்றும் சமூகத்தை மனிதத்தை தேசத்தை நேசிக்கினறவர்களின் அநியாயமான மரணங்கள் எங்கள் ஆன்மாவை உலுக்கிவிடுகின்றது.

நண்பன் சிவலிங்கம் சிவபாலனின் மரணம் புகலிட கலை இலக்கிய உலகில் ஒரு வெறுமையை ஏற்படுத்தியிருக்கின்றது. நண்பன் "சிவலிங்கம் சிவபாலன்". தன்கருத்துக்களோடு ஒத்துப்போகாத மாற்றுக்கருத்துக்காறர்களையும் மயக்கிப்போடுகின்ற, மகிழப்பண்ணுகின்ற, மந்திரவித்தைக்காறன்.

அன்பு, கருணை, காருண்யம், இனிமை, மென்மை, அழகு, நேர்மை, ஆழுமை, போன்ற சொற்பதங்களுக்கு அகாராதியில் அர்த்தங்கள் தேடவேண்டிய அவசியமில்லை அவனுடன் பழகினால் அதற்கான அர்த்தங்கள் தெரிந்துவிடும்.

புகலிடக் கலை இலக்கியப் படைப்புகளைப் பொறுத்தமட்டில் அவனுடைய பணி மிகவும் பாரியது. கடந்த ஓரிரு ஆண்டுகளாக அவனுடைய ஆக்கங்களின் வேகம் அடங்கிப்போயிருந்தாலும் கடந்த இருபது ஆண்டுகளாக எழுதிக்கொண்டிருந்த அதிவேகப்படைப்பாளி.

சில மனிதர்களைப் பொறுத்தமட்டில் சிலருக்குச் சிலரைப்பிடிக்கும் சிலருக்கு சிலரைப்பிடிக்காது ஆனால் இவனை எல்லோருக்கும் பிடிக்கும். அவன்தான் "சிவலிங்கம் சிவபாலன்"!

கலை இலக்கிய உலகுக்கு எண்பத்தைந்து வயதுவரை இருந்து பணிசெய்ய வேண்டியவனை ஐம்பத்தைந்தில் விடைபெற வைத்தது காலன் போட்ட தப்புக்கணக்கே.

அவனுடைய வசீகரப் புன்னகை, அவன் நாவிலிருந்து எழாத சுடுசொல், இவைகளெல்லாம் எங்கள் நினைவுத்திரையில் ஒளிப்படங்களாய்... ...

நண்பனின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்பதோடு அவனுடைய பிரிவால் தவிக்கின்ற மனைவி, பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள், அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

பல்கலை ஆர்வலர் - ஊடகவியலாளர்
அன்பிற்கினியவன்
**கே.பி.லோகதாஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு இலக்கியத் தென்றல் ஓய்ந்துவிட்டது!

23- 05 -2008 வெள்ளிக் கிழமை.

அன்று அந்தச் செய்தியைக் கேட்டதும் மனம் அதிர்ந்துபோய்..... நினைவு அசைய மறுத்து ஸ்தம்பித்தது...... சில மணி நேரம் என்ன செய்வதென்று தெரியாமல்... திகைப்போடு அமர்ந்திருந்து... மனம் திரும்பத் திரும்ப இந்தச் செய்தியை ஜீரணிக்க முடியாமல் அழுதது.

ஒரு நல்ல நட்பு மறைந்து போய் விட்டதே! ஒரு சிறந்த இலக்கியவாதியை இழந்துவிட்டோமே!. ஒரு இனிய கவிஞன் விடை பெற்றுவிட்டானே! என்று நினைக்க நினைக்க விழிகள் சில நிமிடங்கள் பொழி-வானாய்க் கொட்டியது.

இப்போகூட..... இதை எழுதும்போதுகூட..... இதயம் தடுமாற்றமாய்... காரணம் எனக்கும் என் கணவருக்கும் அப்படியொரு இனிய சகோதரனாக... நல்ல நண்பராகத் திகழ்ந்தவர் சிவலிங்கம் சிவபாலன் அவர்கள்.

சென்ற வாரம்தான்.... கிட்டத்தட்ட ஒரு மணிநேரத்திற்கும் மேலாக என்னுடன் இலக்கியம் பற்றி... மேடைப்பேச்சு நிகழ்வுகள் பற்றி.... தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றி... என உரையாடிக்கொண்டிருந்த எங்கள் சிவபாலன் இன்று எங்களிடையே இல்லை.

"இப்பொழுது நான் சுகமாக இருக்கின்றேன்" ஐந்து நாட்களுக்கு முன்னர்தானே கூறினார்! அதற்குள் விதி அவசரப்பட்டுவிட்டதா? நிஜமாக மனம் நினைந்து நினைந்து வெதும்புகின்றது.

எப்படிப்பட்ட உன்னதமான மனிதர் இந்தச் சிவபாலன். புலம்பெயர்ந்த இலக்கியப் பரப்பில் அதிலும் பிரான்ஸில் அவரைத் தெரியாதவர்கள் இல்லையென்றே கூறலாம். இனிமையாகப் பழகும் இவரது பண்பும்.... அன்போடு உரையாடும் வார்த்தைப் பரிமாற்றமும்.... பழகும் யாவரும் அவரை இலகுவில் மறந்துவிட முடியாது.

இலக்கியத் தளத்தில் எந்தப் பகுதியில் நாம் இவரைப் பார்க்கவில்லை நாநூறுக்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதிய ஒரு உன்னத கவிஞனாக....! மரபுக் கவிதைகளையும் தரும் சிறந்த கவிஞனாக....! கவியரங்குகளிலும் பங்குபற்றும் உயர்ந்த கவிஞனாக....! ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதிய ஒரு நல்ல எழுத்தாளனாய்....! பட்டிமன்றங்கள் கருத்தரங்கங்களில் பேசும் ஒரு நல்ல பேச்சாளனாய்....! எந்த விடயத்தையும் எழுதவும் சொல்லவும் விமர்சிக்கவும் கூடிய ஒரு வல்லவனாய்....!இத்தனை பெருமைமிக்க சிறப்புக்களைக் கொண்ட கவிஞர் சிவலிங்கம்-சிவபாலன் அவர்கள் இன்று எங்களுடன் இல்லை!. இறப்பு இயற்கை என்றாலும் மனத்தால் ஜீரணிக்க முடியவில்லை.

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டு.... யாழ் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று.... நில அளவையாளராகப் பணிபுரிந்து.... பின்பு புலம் பெயர்ந்து...... கலைகளின் பிறப்பிடமாம் பிரான்ஸில் தனது வாழ்விடத்தை நிலைப்படுத்தி.... இத்தனை இலக்கிய பெருமைகளுடனும்..... மனைவி பிள்ளைகளுடனும் வாழ்ந்து.... இப்போது சில மாதங்களாக லண்டனில் தங்கியிருந்து தனது இறுதிப் பயணத்தை நடாத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை முறை கேட்டிருப்போம்? எத்தனை பேர் கேட்டிருப்போம்? புத்தகமாக அச்சிட்டிருக்கும் "சுரங்கள் மாறி" என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிடுவோம் என்று....! புன்னகை மாறாத புன்னகையோடு வெளியிடுவோம்! வெளியிடுவோம்! என்று சொல்லிச் சொல்லியே "சுரங்கள் மாறி"யை வெளியிடாமல் சத்தமின்றிச் சென்று விட்டாயே சிவபாலனே.

புலம் பெயர்ந்த ஈழத்து இலக்கியப் பரப்பு ஈடுசெய்ய முடியாத ஒரு இழப்பை சந்தித்திருக்கின்றது. நிறைவு செய்ய முடியாத ஒரு இழப்பாகவும் உன்னை இழந்து நிற்கின்றது. உனது ஆத்மா எங்களை விட்டுப் பிரிந்தாலும் உனது ஆக்கங்களும்.... நீ பண்போடு பழகிய பவுத்திரத் தன்மைகளும்... அன்போடு பேசிய வார்த்தைப் பரிமாற்றங்களும்.... யாவருக்கும் இனிய நண்பனாகவும்.... நல்ல சகோதரனாகத் திகழ்ந்த நாட்களும்.... என்றும் எங்கள் நினைவை முற்றுகையிட்டுக்கொண்டே நிற்கும்.

தாளாத வேதனையோடும்... மனச் சுமையோடும்.... உனது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். உங்கள் குடும்பத்தாரின் சோகத்தில் நாங்களும் பங்கு கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

**எழுத்தாளர் தமிழ்ப்பிரியா-இளங்கோவன்**
பிரான்ஸ்

# அவன் ஒரு நல்ல நண்பன்!

அவன் ஒரு நல்லவன்!
அவன் ஒரு நல்ல நண்பன்!
அவன் ஒரு நல்ல கலைஞன்!
அவன் ஒரு நல்ல சிந்தனையாளன்!
அவன் ஒரு நல்ல எழுத்தாளன்!

இவன் ஏன் எம்மைவிட்டுப் போகவேண்டும்?
இவனை யார் அங்கு அழைத்தது?
இப்படி இளைய கலைஞர்கள் அங்கு போனால்
இன்னும் இங்கு நான் இருந்தென்ன லாபம்?

நான் வரும் நாள் நெருங்கிடவே
எனக்கொரு இடம் தாடா தம்பி!
கண் காணாமல் லண்டனில் நீ கண்மூடினாய்
லாச்சப்பலிலும் கண்கள் கரைந்து அழுகின்றனவே!

உனது ஆத்மா சாந்தி அடைய
என்றும் நான் இறைவனை வேண்டுகின்றேன்

அன்பன்
**ஞானம் - பீரிஸ்**
G.P.Films,
ஐரோப்பாவின் முதல் சின்னத்திரைப் படத்தயாரிப்பாளர், இயக்குனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மேம்பாட்டுச் சிந்தனைப் படைப்பாளி..!

"நவில் தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்பு உடையாளர் தொடர்பு"

- திருக்குறள்.

படிக்கப் படிக்க உயர்ந்த நூல்கள் நயத்தை மேலும், மேலும் தந்துகொண்டேயிருக்கும். பழகப்பழகப் பண்புடையோர் நட்பு இனிமையை நல்கிக் கொண்டேயிருக்கும். இத்தகைய பண்புடைய மனிதன் தான் சிவலிங்கம் சிவபாலன்..!
இரு தசாப்தங்களுக்கு மேலாக அவரோடு பழகிவந்திருக்கிறேன். பழகப்பழக அவர்மேல் அன்பும், பரிவும் பாசமும் ஏற்படும். அத்தகைய முகலட்சணங்களும் அகலட்சணங்களும் பொருந்திய ஓர் உடன்பிறப்பாக என்னைக் கவர்ந்தவர்.

அவரது படைப்புகளைப் படித்திருகிறேன். விமர்சித்திருக்கிறேன்.
மேடையில் அவரது உரைகளைக் கேட்டிருக்கிறேன். பாராட்டியிருக்கிறேன்.
கவியரங்குகளில் அவர் கவிதை பொழிய இரசித்திருக்கிறேன்.

வெற்றுக் கற்பனைச் சொற்பின்னல்களைக் கவிச்சரமாக்கி விற்று ஆதாயம் தேடமுற்படாது சமூக மேம்பாட்டுச் சிந்தனைகளைச் சாதாரணருக்கும் கொண்டு செல்லும் ஊடகமாகக் கவிதையைக் கையாண்ட மரபுக் கவிஞரவர்.

அறிவுத்திறத்தாலும், தேடல் நிறைந்த வாசிப்பின் மேன்மையாலும் அவரது படைப்புகள் சிறப்புற்றன.
ஒட்டுமொத்த சமுதாய மேம்பாட்டினை காணவேண்டும் என்ற கருத்து அவர்தம் படைப்புகளின் அடிநாதமாகும்.

மனிதநேயமற்ற எந்தப் படைப்பும் வெற்று முழக்கமேயாகும்.
தன் வாழ்விற்கே யாவும் என்று எண்ணுபவன் சுயநலமி..
தான் வாழ்வதே சமூக மேம்பாட்டிற்கே என்று எண்ணுபவன் சமூகத்தின் தாய் போன்றவன்..!

பக்தி இலக்கியங்களின் இனிமையை, அழகியலை அறிந்து அவற்றினைப் போற்றிடப் பின்னிற்காதவர் சிவபாலன்.

சிவபாலன் படைப்புகள் கட்டுரையாயினும், கவிதைகளாயினும், கதைகளாயினும் அனைத்திலும் சரடாய் இழையோடி இணைப்பது சமூக மேம்பாட்டுச் சிந்தனையேயாகும்.

"எங்கும் தண்ணீர் நிறைந்திருக்கிறது. ஆனால் தாகம் தீர்க்க குடிநீர் கிடைக்கவில்லையே" என்றான் ஓர் ஆங்கிலக் கவிஞன்.
புலம்பெயர்ந்து வந்த தேசத்தில் படைப்பாளிகள் என்று சொல்லிக்கொள்வோர் ஏராளம் தான்.
ஆனால் தாகம் தீர்க்கக் கிடைத்த குடிநீர் போன்று, இங்கு இலக்கியத் தாகம் தீர்க்கவல்ல ஒரு சில சிறந்த படைப்பாளிகளுள் சிவபாலனும் ஒருவர்.

அழகு, அன்பு, கருணை நிறைந்த அவரது முகத்தோற்றமும், புன்சிரிப்பும் இனிய குரலும் என்றும் மறக்கமுடியாதவை.
அவரது படைப்புகள் மூலம் அவரது நாமம் நிலைத்து வாழும்..!

"உறங்குவது போலும், சாக்காடு, உறங்கி
விழிப்பது போலும், பிறப்பு"

**"கல்வி் சேவையாளர்" சி. காராளபிள்ளை**
(முன்னாள் அதிபர், பாரிஸ் தமிழர் கல்விநிலைய ஸ்தாபகக் காப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கிழியவைத்த சிவபாலனின் இழப்பு...

சிரித்த முகமொன்று தன் சிரிப்பதனை மறந்ததுவோ!
சிந்தனைப் பூவொன்று சிந்திக்க மறந்ததுவோ!!

சிவபாலா! உனது மரணச் செய்தியைக் கேட்டதும் எங்கள் இதயங்களெல்லாம் கிழிந்ததடா

தம்பி! இறுதியில் உனது முகத்தைக்கூட பார்க்க எமக்கு கொடுப்பனவு இல்லாமல் போய்விட்டதே!!!

கால ஓட்டத்தில் உனக்கு உறவாகிப் போனவர்களும் உனது நண்பர்களும் சிந்திய கண்ணீர்! உன்மீது அவர்கள் கொண்ட பாசத்தை பெரு மதிப்பை காட்டி நின்றது. நீ மற்றவர்கள்மீது கொண்டுள்ள பண்பும் பாசமும் அத்தகையது.

உலகில் படைக்கப்பட்ட ஒவ்வொன்றிற்கும் ஒரு வரலாறு இருக்கின்றது.
அது பொருளாக இருந்தாலும் சரி! உயிராக இருந்தாலும் சரி!!

சிலரின் வரலாறு பதியப்படுகின்றது! சிலர் வரலாறாகவே போவிடுகின்றார்கள்!

கவிதையில் கதைகளில் கருத்தரங்கங்களில் ஒரு வரலாற்றைப்
படைத்துக்கொண்டிருக்கும்போதே எங்கள் சிவபாலன் வரலாறாகிப்போய்விட்டான்!

உனக்கு இரங்கல் எழுத பேனாவை எடுக்கும்போது ஐயன் வள்ளுவனின் குறளில் ஒன்று நினைவிற்கு வருகின்றது.

“குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு”

தம்பி சிவபாலா! உன் உடம்போடு இருந்த உயிர்தான் பிரிந்து வேறு இடத்திற்கு சென்றுவிட்டது உன் நினைவுகள் எல்லாம் எங்களோடுதான் இருக்கின்றது.

தமிழுக்கு தொண்டு செய்தவர்கள் சாவதில்லை! உன் எழுத்துக்கள் இருக்கின்றவரை நீ என்றும் மக்களோடு வாழ்ந்துகொண்டே இருப்பாய்.

உனது இழப்பை எம்மால் ஏற்க முடியவில்லைத்தான். ஆனாலும் நாம் எம்மைத் தேற்றிக்கொள்ளத்தான் வேண்டும்.

அங்கமெல்லாம் கண்ணாகி அழுதபோதும்
அவனியிலே பிரிந்தவர்கள் வருவதுண்டோ?
பொங்கு துயர் நாம் மறப்போம் உலகம் ஈதே
பொன்னுலகை அடைவதற்கு மாற்றம் காண்போம்
எங்குமுள்ள இறைவனடி சேர்வதற்கு
இப்போதே அன்பறங்கள் புரிவோம் வாரீர்

மங்கிவிடா வாழ்வினையே வாழ்வதற்கு
மனதினிலே மாசகற்றி வாழ்வோம் நாமே

உன் ஆத்ம சாந்திக்கு ஆண்டவனிடம் மன்றாடுவோம்

உன் நினைவில் நனையும்
**முகத்தான்- யேசுரட்ணம்**
மேடை, திரைப்பட வானொலி கலைஞர், நாடக பிரதியாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கவொண்ணா மனிதனவன்..!

பூவிலும் மெல்லியதாய்ப் புன்சிரிப்பு
புகுந்து உள்நோக்கிடும் விழிகள்
நாவினில் நறுங்கனிச் சொற்கள்
நாளும் மறக்கவொண்ணா மனிதன்..

காமனை ஒக்கும் சிவபாலனவன் - பொல்லாக்
காமத்தைப் பெரிதென நினையாதவன்
சோமனைப்போல் குளிர்ப் பேச்சினன் - நாளும்
சுறுசுறுப்பான தமிழ்ப் படைப்பாளனவன்..

உடலுக்கணிகலங்கள் பலவேண்டும் என்பார்
உயிருக்கு அழகெதுவெனத் தெரியாதார்..
கடனுக்குவேண்டியும் கட்டியழகு பார்ப்பார்
காலனைவென்றவர் வாழவா போகிறார்..?

மணத்தையே நுகரத்தான் விரும்பி
மலரினைக் கசக்கிடுவார் சிலர்
பணத்தையே பெரிதென் றெண்ணி
பாதகம் புரியவும் துணிவார்...!

குணத்தையே விலைக்குப் பேசித்தினம்
குரங்காட்டம் போடுவார் அவர்..
இனத்தையே எண்ணாமல் நாளுமந்த
இருப்பையே பெருக்குவாரை இகழ்வாய்..!

கரையறியாக் காட்டாற்று வெள்ளம்போல
கவிதைமழை பொழிவாய் அரங்குதோறும்
நிரைநிரையாய் கட்டுரை கதைகள்பலவும்
நிறையத்தான் எழுதியிங்கே நிலைத்திட்டாய்..!

உரைநடை யாப்பிலக்கணம் கவிதைவழி
உணரணும் கொஞ்சந்தானும் என்பாய்
வரைகின்ற வார்த்தையெல்லாம் வளமாக
வடித்திட்ட உன்படைப்புகள் வாழும்..!

அற்பமாய் உன்னாயுள் குன்றியங்கே
ஆழ்ந்திடுவாய் உறக்கமதி லென
சொற்பனந் தன்னிற் கூடவே
எண்ணிட வில்லை நண்பா...!

இறுதியாய் என்விழாவில் கலந்தங்கே
இலண்டனிலும் என்கவிதை சொன்னாய்
மறக்கமுடியுமா உன்னையே நானும்
மனதிலே வருகிறாய் நாளும்...!

*கவிஞர்*
***வி. ரி. இளங்கோவன்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
ஐரோப்பா

# சிவலிங்கம் சிவபாலன் ஒரு நீண்ட உறவின் பிரிவு!

ஈழமுரசின் நெருங்கிய உறவுகளில் சிவலிங்கம் சிவபாலனும் ஒருவர். ஈழமுரசு இதழை கப்டன் கஜன் ஆரம்பித்த காலத்தில் இருந்து, இறுதிவரை அதனோடு தனது உறவைப் பேணி வந்த சிவலிங்கம் சிவபாலன் அவர்களை நான் மிக நீண்ட காலமாகவே அறிந்திருந்தேன். மென்மையான, அமைதியான அவரது சுபாவம் போலவே அவரது எழுத்திலும் வன்மையைக் காணமுடியாது. எவரும் புரிந்து கொள்ளும் விதத்தில் மிகவும் தெளிவாகவும், அழகாகவும், மொழிக் கலப்பில்லாமலும் எழுதும் அவரது திறன்தான் ஈழமுரசுடனான அவரது உறவை இறுதி வரை தக்க வைத்திருந்தது என்றே நான் கருதுகின்றேன். புலம்பெயர்ந்த நாடுகளில் நடைபெறும், நிகழ்வுகளை உள்வாங்கி, அதனைப் பதிவாக்க வேண்டும் என்பதில் மிகவும் ஆரோக்கியமான சிந்தனையைக் கொண்டிருந்தவர். என்னுடன் கதைக்கும்போது ஏன் அந்த நிகழ்வு பற்றி ஈழமுரசில் வரவ-ில்லை என்று ஆதங்கத்தோடு கேள்வி எழுப்புவார். வேலைப் பளுவைக் காரணம் காட்டிவிட்டு, ஏன் கேள்வி எழுப்புகின்றீர்கள் நீங்களே அதனை எழுதித் தரவேண்டியதுதானே என்றால், சற்று யோசிப்பார். யோசித்துவிட்டு சரி எழுதித் தருகி-றேன் என்று கூறுவார். எழுதித் தருவதாகக் கூறினார் என்றால் நிச்சயமாக எழுதித்தந்தே தீருவார். இறுதியாக மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர்கள் நடத்திய ஒன்று கூடல் ஒன்று தொடர்பாக என்னுடன் உரையாடியவர், அதுபற்றி ஈழமுரசில் எழுத வேண்டும் என்றார். இதில் என்ன கேள்வி, மக்களுக்கு சென்றடைய வேண்டிய விடயம் என்றால் எழுதத்தானே வேண்டும். எழுதித் தாருங்கள் என்றேன். இரண்டு நாட்களின் பின்னர் எழுதிக் கொண்டு வந்தவர், நான் இல்லாததால் ஈழமுரசில் கொடுத்துவிட்டு சென்றிருந்தார். இளையோர் உலகம் எதிர்பார்ப்பதென்ன? என்ற தலைப்பிட்டு எதிர்காலத் தலைமுறை குறித்து அந்தக் கூட்டத்தில் இடம்பெற்ற கருத்துக்களுடன் தனது எண்ணங்களையும் பதிவாக்கியிருந்தார்.

சிலரது கட்டுரைகள் தேவையில்லாத நெருடல்களை ஏற்படுத்தி, கத்திரிக்கோல் போட வேண்டிய நிலைக்கு கொண்டுவந்து விட்டுவிடும். ஆனால், சிவலிங்கம் சிவபாலனின் கட்டுரைக்கு என்றுமே அந்த நிலை வந்ததில்லை. சில வேளைகளில் அவரது கட்டுரைகளை வாசிக்காமலே தட்டச்சுக்கு அனுப்பிவிட்டு அதன்பின்னரும் வாசிப்பதுண்டு. அவ்வளவுக்கு தேவையற்ற எதையுமே தொடாது, தேவையானதை மட்டுமே அவர் தொட்டுப்பேசியிருப்பார் என்ற நம்பிக்கைதான்.

அந்தக் கட்டுரையை கொண்டுவந்து கொடுத்ததன் பின்னர், அவரைச் சந்திக்க முடியவில்லை. அதுதான் இறுதிச் சந்திப்பாக இருக்கும் என்றும் அப்போது எண்ணிப் பார்த்தில்லை. அன்று வழமைபோல் பரிஸ் லாச்சப்பல் வீதியால் வந்து கொண்டிருந்தபோது, ஒட்டப்பட்டிருந்த அவரது பிரிவின் அறிவிப்பை பார்த்தபோது, அதிர்ந்து போய்விட்டேன். சொல்லாமல் கொள்ளாமல் விடைபெற்றுவிட்ட அவரது இழப்பு நெஞ்சைக் கனக்க வைத்தது. புலம்பெயர்ந்த மண்ணில் ஏற்படுகின்ற அவலங்களில் ஒன்றாக இந்த இளவயது மரணங்கள் தொடரவே செய்கின்றன. சாவு நெருங்கி வருவதற்கான வயதை அவர் எட்டவில்லை. ஆனாலும், சாவு இத்தனை வேகமாக அவரைக் காவு கொண்டுவிட்டது என்பது வேதனைதான்.

ஆனாலும், அவரது எண்ணங்களும், சிந்தனைகளும் இன்னும் அப்படியே எம்கூடவே இருக்கின்றன. கல்வெட்டுப் பதிவுகளாக ஈழமுரசிலும் இன்னும் பல வெளியீடுகளிலும் அவரது சிந்தனைகள் பதியப்பட்டே இருக்கின்றன. இதோ, இந்த "சுரங்கள் மாறி" என்ற அவரது சிறுகதைத் தொகுப்பும் அவரது சிந்தனையின் வடிவம்தான். இன்னொரு வடிவமாக ஒரு நூலினூடாக அவர் எம்மோடு இனி உலாவந்து கொண்டே இருப்பார்.

பொறுப்பாசிரியர்

**கி.ஜெய்சந்தர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோகாத இதயம்

**சிவலிங்கம் ~ சிவபாலன்**

சிவபாலனைப்போன்று இலக்கிய நண்பர்களைக் காண்பதரிது. எல்லலோரும் அவருக்கு நண்பர்கள் என்பதைவிட எல்லோருக்கும் அவர் நண்பர் என்பதே பொருந்தும். நல்லன பற்றி மட்டுமே சிவபாலனால் சிந்திக்கமுடியும். நல்லன பற்றிமட்டுமே அவரால் பேசமுடியும். அதனால் அவரால் எல்லோருடனும் நட்பாக பழகமுடிந்தது. அதுவே அவரது பலமாயும் பலவீனமாயும் இருந்தது. யாருடனும் ஒரு நல்லநோக்கத்திற்காக பழகுவதற்கு அவர் எப்போதுமே தயாராகவிருந்தார். தன்னை எந்த இடத்திலும் விட்டுக்கொடுக்க அவர் தயங்கியதில்லை. புகழ்நோக்கி அவர் அலைந்தவரில்லை. இலக்கியத்தில் பொருள் இழப்புகள் எல்லாம் அவருக்கு சாதாரண விடயங்கள். இதுவே அவரது குடும்வாழ்விலும் இடைஞ்சல்களை தந்தது.

பூவிலும் மென்மையானது அவரது இதயம். அவர் கொடுஞ்சொல் பேசி யாரும் அறிந்ததில்லை. யாருடனும் அவர் சண்டையிட்டுக்கொண்டதாகவும் அறிந்தததில்லை. விமர்சனங்களைக்கூட அவர் எப்போதும் மென்மையாகவே அணுகினார். பாரிஸில் வெளிவந்த சஞ்சிகைகள், பத்திரிகைகளில் அவர் கைப்படாதன எதுவுமில்லை. யார் கேட்டாலும் மறுக்கமாட்டார். குழுவாதங்கள், கோஸ்டிகளுக்கு அப்பால் அவர் விலகிநின்றார். ஆனாலும் தனித்து நின்றவரில்லை. எல்லோரையும் ஒத்திசைத்து ஓடவைக்க தன்னாலானளவு முயன்றார்.

கவிதை, கட்டுரை, நாடகம், விமர்சனம் என எல்லாவடிவங்களிலும் எழுதிப்பார்த்தார். அவரது தொகுப்புகள் தயார்நிலையில் இருந்துகொண்டிருந்தன. இலக்கிய பந்தாக்களை அடியோடு வெறுத்த அமைதியான ஒரு மானிடர். எப்போதும் புன்சிரிப்பு. அளவான மென்பேச்சு. நல்லதொரு மனிதரை நாமிழந்தோம். அஞ்சலி, அது எம் இதயத்திலிருந்து தானாய் வருகிறது. கட்டுப்படுத்தமுடியாத சோகம் கவ்விக்கொள்கிறது. கண்ணீரோடு விடை-தருகிறேன். நண்பா போய்வா!

**மனோ**
கலை இலக்கிய விமர்சகர்
பிரான்ஸ்
25.05.2008





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழியது உமையனுப்பி
# வானத்தைப் பார்த்திருப்போம்

புன்னகை பூத்த பூரன் புதுக்கவி தந்த சீலன்
நன்னெறி வழியில் நின்று நாவிலும் அன்பு காட்டி
தண்ணெழில் தமிழில் நல்ல தத்துவக் கவிவடித்து
திண்ணமாய் நின்றசெல்வன் திகழ்சிவ பாலன்தானோ

அண்ணலே உந்தன் அன்பை அகிலத்தில் நாங்கள்
பண்ணினால் பாடினாலோ பாவினால் இசைத்திட்டாலோ
எண்ணியும் பார்க்கொவண்ணா இன்கவி நீவிரன்றோ
கண்ணிலே நீர்பெருக்கி காலனைத் தொடர்ந்ததென்ன?


முன்னமெம் முன்னால்நின்று முதுமொழி தம்மைக்காட்டி
பின்னுமோர் அடியெடுத்து பிசகாமல் கவி சமைத்து
தண்ணெழில் கவிஞனாக தரணியில் தனித்து நின்ற
விண்ணெழில் புகழும்விட்டு விரைந்துநீர் போனதெங்கே?

அழகிய முகத்தில் என்றும் அருகாக ஒளிந்து கொண்டு
பழகிய எம்மைக் கண்டால் பளிச்சிடும் புன்சிரிப்பு
இனிமையாய் கதைக்கும்போது இன்னமும் கொஞ்சநேரம்
தனிமையாய் உரையாடவே தவித்திட வைப்பாய் எம்மை

இனியதை எங்கு காண்போம் எங்களின் அன்பு நண்பா
கனியொன்று கைநழுவி காலன்கை போனதன்றோ
விழியது நீரைக்கொட்ட விண்வழிப் பயணமானாய்
வழியது உமையனுப்பி வானத்தைப் பார்த்திருப்போம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

ஆன்ம சாந்திக்காய்
இறையடி வேண்டி நிற்கும்
**இலங்கயர் கனகசபை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TIRUMARAI KALAMANRAM - FRANCE
# திருமறைக்கலாமன்றம் - பிரான்ஸ்

1, Impasse de la motte , 93300 Aubervilliers.

## நல்லமனிதனை இழந்துவிட்டோம்

கடந்த 23 வைகாசி 2008ல் மறைந்த எழுத்தாளரும், கவிஞருமான திரு.சிவலிங்கம் சிவபாலன் அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகவும் கவலையடைந்தேன். அவரது புன்சிரிப்பும், அமைதியான சுபாவமும் இன்றும் என்நினைவில் வந்து மறைகின்றது. திரு.சிவபாலன் அவர்களை தாயகத்தில் எனக்குத் தெரியாத பொழுதிலும் பிரான்சில் அவரது அறிமுகம் சுவாரஸ்யமானது. எமது திருமறைக்கலாமன்றம் 10வருடங்களுக்கு முன் **AMORK** மண்டபத்தில் கலைவண்ணம் நிகழ்ச்சியை நாம் நடாத்த திட்டமிட்டோம். அந்த நிகழ்வில் நாட்டுக்கூத்தின் சில பாடல்களை பாடி மேடையேற்றம் செய்ய எண்ணம் கொண்டோம். பாடல்களை எழுதுவதற்கு ஒருவர் தேவையாகவிருந்தது. திரு.பெஞ்சமின் இம்மானுவல் அவர்கள் அவரது பெயரைச் சொல்லி அவர் நல்ல எழுத்தாளர். விரும்பினால் அவரிடம் கேட்டுப் பார்க்கலாம் என்றார். நானும் அதற்கு சம்மதித்து நான் பாடும் பாடல் ராகத்திற்கேற்ப காட்சிக்கு பொருத்தமான சொற்றொடர்களைப் பயன்படுத்தி பாடலை எழுதித்தரும்படி கேட்கச் சொன்னேன். அவரும் அதற்கு சம்மதித்து எங்கள் இருவரையும் ஒருநாள் சந்திக்கும் படி வீட்டுக்கு அழைத்தார். அந்தச் சந்திப்புதான் அவருடனான எனது முதல் தொடர்பு. இரண்டு மணித்தியாலங்களுக்குள் அவர்மூலம் கூத்தை எழுதிக் கொண்டு வீடுதிரும்பினேன். அக்கூத்து பின்னர் வெற்றிகரமாக மேடை யேற்றப்பட்டது.

முதல் சந்திப்பிலேயே அவரது இனிய பண்பையும், விருந்தோம்பலையும் அறிந்துகொண்டேன். பழகுவதற்கு மிகவும் இனியவர். யாரையும் கோபித்து அறியார். பேச்சில் எந்தவேளையிலும் மரியாதை இருக்கும். தனது கருத்தை நேரடியாக சிரித்தபடி வெளிப்படுத்தத் தயங்கமாட்டார். இலைமறை காயாய் இருந்து கொண்டு பல சிறுகதைகளையும், கட்டுரைகளையும்,கவிதைகளையும் யாத்தவர். நல்ல சிந்தனைத் தெளிவும், கூடுதல் வாசிப்புமுடைய நல்ல இலக்கியவாதி. பெரும்பாலும் இலக்கியவாதிகள் கருத்து முரண்பாடுடையோராக பிளவுபட்டு இருக்கின்ற பொழுதிலும் இவருக்கு எல்லோருடனும் சிநேகமான நட்புறவு காணப்பட்டது. இது அனைவரையும் நண்பனாக எண்ணும் இவரது தனிப்பட்ட பண்புக்கு கிடைத்த வெற்றியென்றே கூறலாம். ஒரு நல்ல மனிதம் மரணித்தது எம்மை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

இவரது பிரிவால் கவலையுற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், இலக்கிய நண்பர்கள் அனைவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம். இவர்களோடு அத் துக்கத்தில் நாமும் பங்குகொண்டு அவரது ஆன்ம சாந்திக்காக பிராத்திக்கின்றோம். இலக்கிய நண்பர்களால் வெளியீடுசெய்யவிருக்கும் அவரது சிறுகதைத் தொகுப்பு நூல் அவரது நினைவை உலகமுள்ளவரை பறைசாற்றும் என நம்புகின்றோம்

**திரு.டேமியன் சூரி**
செயலாளர்
திருமறைக்கலாமன்றம்
பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணியமான மனிதன் காத்திரமான படைப்பாளி

உன் மூச்சு அடங்கிய
பின்பும் உன்னைப்
பற்றிய பேச்சு
அடங்கவில்லை

உன் நண்பர்கள்
முகங்களில் எல்லாம்
சோக இருள் பரவியுள்ளது
இலக்கியச் சூரியனே
நீ கண்மூடிக்கொண்டதால்

இலக்கியச் சந்தைக்கு
வருபவர்கள் எல்லோரும்
அதிகம் உச்சரிப்பது
உனது பெயர்தான்

நீ உன் ஆயுளை
முடித்துக் கொண்டதால்
கதை கவிதை கட்டுரைகள்
கருவிலேயே அழிந்துவிட்டன

பத்திரிகைகள் பக்கங்கள்
குறைந்தே வெளிவருகின்றன

வீதிகளில் ஒட்டப்பட்டிருக்கும்
உன் அஞ்சலிப்
பிரசுரங்களைக் காண்பவர்கள்
அதன் அருகில் சில
நிமிடங்கள் நின்றுவிட்டு
விலகிச் செல்கின்றனர்

யார் விண்ணுலகம் சென்றார்
என்ற செய்தியினை
அறிவதற்காய் அல்ல
இவருமா மண்ணுலகம்
விட்டகன்றார் என்னும்
வேதனையுடன்

நீ மனம்கொண்ட
இலக்கியக் காதலி
உன்னைப் பிரிந்திட
விரும்புவதாய்
கூற்றுவன் காதில்
இரகசியமாய் பிராது
செய்ததால்
அவன் உன்னை
அழைத்துச் சென்றானா?

உன் விடையத்தில்
மட்டும் எல்லாக்
கலை இலக்கிய
நண்பர்களும்
ஒரே கருத்தைக்
கொண்டிருப்பதால்
படைப்பாளிகளின்
இறப்பின் பின்
பட்டிமன்றங்கள் நடாத்தும்
மேடைகள் எல்லாம்
வெறுமையாய்க் காணப்படுகின்றன

உன்னை இழிந்துரைத்தவர்கள்
கூடத் தங்கள்
அறியாமை கண்டு
வெக்கி நிற்கின்றனர்...

நீ மனிதனா?
கவிஞனா?
என மனதில் நிறுத்திப்
பார்த்தபோது
மனிதனின் பக்கமே
கனமாக உள்ளது

உனக்குப் போர்க்கப்
பொன்னாடைகள்
மீதமுள்ளதால்
எழுந்து வா தோழனே!

நட்புடன்
செவ்ரோன் **தீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்கள் சமைத்த பண்புள்ள கவியே நீ மரணிக்கவில்லை

பூக்களைப் போன்ற ஒரு புனிதமான மனிதருக்கு மரணமா? காற்றுக்கூட மெல்லத் தீண்டும் கவிஞர் இன்று நம்மை விட்டு பிரிந்து விட்டார் என்று கனவில்க் கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை. வலிகளைத் தாங்கிய வரிகளோடு மற்றவர்களைத் தனதாக்கி வண்ணக்கவி படைக்கும் மென்மையான கவிஞனுக்கு மரணமா?

எண்ணக் கருத்துக்களை வடித்தெடுத்து இமயத்தைத் தொட்ட கவிஞனுக்கும் மரணமா? நினைத்துப் பார்க்க முடியவில்லை. சின்னக் குழந்தையின் மறு பிரசவம் இவன். வாய் விட்டுப் பேசினால் அடுத்தவருக்கு வலிக்குமே என்று மெல்லிய புன்னகையோடு மென்மைக்கு மெருகூட்டி மெதுவாகப் பேசும் இந்த அற்புதக் கவிஞன் மீது மரணத்துக்கு என்ன கோபம்?

தனக்கே உரிய தன்னடக்கத்தோடு இவர் படைத்த கவிதைகள் கட்டுரைகள் சிறுகதைகள் குறுநாவல்களென பிரசுரமாகாத பதிவுகளே இல்லையென அடித்துக் கூறலாம் இலங்கையில் மட்டுமல்ல புலம்பெயர் நாட்டிலும் இவர் படைப்புக்கள் யாவும் புதுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தியிருப்பதை எவராலும் மறுக்கவோ மறக்கவோ முடியாது.

இந்த ஈழத்துக் கவிஞன் விரல்களுக்கிடையில் மெதுவாகப் புகுந்த பேனாவுக்குத்தான் எத்தனை மென்மை எத்தனை வலிமை. எழுத்துக்களின் வரிகள் சுழியோடி வந்து அத்தனை விந்தைகள் நிறைந்த செய்திகள் சொல்லும். ஏக்கப் பெருமூச்சோடு சொல்கின்றேன் இந்தக் கொடுமையான இறைவனுக்கு இதயமே இல்லையெனலாம். சிரித்த முகத்துடன் மற்றவர்களைக் குசலம் விசாரிக்கும் பண்பு வேறு எவருக்கும் அத்தனை இலகுவில் வந்துவிட முடியுமா?

மலர்களின் இதழ்கள் கூட சில வேளைகளில் பட்டால் வலிக்கும். ஆனால் இந்தக் கவிஞன் மூச்சுக்கூட மற்றவரை நெருங்கும் போது மயக்கும் வலிமையோடு சிரிக்கும். இந்த அற்புதமான கவிஞனுக்கு தலைக்கனமே இல்லை. புலம்பெயர் நாட்டின் சந்து பொந்துகளிலெல்லாம் இடம்பெறும் நூல் வெளியீடுகள், கௌரவம் செய்யும் விழாக்கள், புதுமைப் படைப்புக்களின் அரங்கேற்றங்கள், கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள், கருத்தாடு களங்கள், யாவற்றிலும் கலந்துகொண்டு பாராட்டுக்கள் தெரிவுக்கும் முதன்மையான மனிதர் இவர்.

எழுத்துக்களின் புதுமையை நன்குணர்ந்த இந்தக் கவிஞர் ஏணிப்படிகளில் ஏறத்துவங்கும் திறமை மிக்கவர்களுக்குப் பக்கபலமாக நின்று அவர்கள் பெருமையில் தானும் பங்கெடுத்துப் பூரிப்படைவார். மனிதனை மனிதனாக மதிக்கும் மனிதத்திற்கு மரணம் என்று ஏற்றுக்கொள்ள முடியவேயில்லை. இருப்பினும் எம்மிடையே இருந்து வரலாற்றில் பதிவுகள் தந்த எங்கள் புதுமைக் கவிஞன் பாக்கள் கேட்க இறைவனும் விரும்பியதாலோ என்னவோ இந்த இளவயதுக் கவிஇளவலை தன்னிடம் அழைத்து விட்டார். இந்த அற்புதப் படைப்பாளனின் பேனா மூடப்பட்டாலும் அவன் இதய சுத்தியோடு எழுதிய கவி கதை வரிகளுக்கு விலங்கிட எவராலும் முடியாது என்ற இறுமாப்போடு அவர் இழப்பினைத் தாங்கி வேதனைப்படும் குடும்பத்தவர்க்கு குழந்தைகளுக்கும் என் கண்ணீர் அஞ்சலிகள். சிவலிங்கம் சிவபாலன் என்றுமே எங்களுக்கு கவிபாலன்தான்!

இதயவேதனையுடன்...

**அப்புக்குட்டி. T.இராஜகோபால்**

மேடை, வானொலி திரைப்படக் கலைஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிந்த முல்லை வாடியது ஏன்?

சிரித்த முகம் செந்தளிர் தேகம்
சிந்தனையிலோ தூய தமிழ் மணக்கும்
விரிந்த முல்லை வாடியதோ பூமியிலின்று
விண்ணுலகில் வாழ்ந்திடுமே நன்று

நீரினில் தோன்றிய குமிழாய்
நீண்ட ஆயுள் குறைந்ததே - அதன்
காரிருள் சூழ்கிறதே எமதுள்ளத்தில் - இதைக்
களைந்திட வழியேது இவ்வுலகில்?

புலம் பெயர்ந்த வாழ்ந்த போதிலும்
புதுக் கருத்தை வெளியிட்டாய் எதிலும்
நலம் நாடியே உழைத்தாய் தமிழினத்துக்கு
நாமதை மறவமால் துணையிருப்போம் நின் சொந்தத்துக்கு

**கவிஞர். பாரீஸ் . பார்த்தசாரதி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பை சுவாசிப்பாகக் கொண்டவன் சிவபாலன்.

எனது புத்தகசாலையில் வாசிப்பை நேசிப்பாகக் கொண்டவர்கள் பலர் வந்து செல்வார்கள். ஆனால் அவர்களில் வாசிப்பை தமது சுவாசிப்பாகக் கொண்டவர்கள் மிகச் சிலரே!

அந்த மிகச்சிலரில் தம்பி சிவபாலனும் ஒருவர்.

வீண் சர்ச்சைகள் எதிர் வாதங்கள் எதனையும் எப்பொழுதும் இவரிடம் நான் கண்டதில்லை!

தான் வாழ்ந்த சுவடு தெரியாமல் வாழ்ந்த ஒரு நல்ல மனிதா். தான் இந்த மண்ணை விட்டுச் சென்றதனையும் அப்படியே செய்துவிட்டார்!.

மனிதம் நிறைந்த இந்த நல்ல மனிதனுக்கு எங்கள் குடும்பத்தின் இதய அஞ்சலிகள்

**மு.சிவதாஸ்**
அறிவாலயம் புத்தகசாலை - பாரிஸ்

# காற்றுக்கு நிகரானவன் சிவபாலன்!.

காற்றுக்கு நிறமில்லை!

காற்று எல்லா இடங்களிலும் பரந்து இருக்கின்றது ஆனால் கண்ணுக்குத் தெரிவதில்லை.

நண்பன் சிவபாலனின் வாழ்க்கையும் அப்படித்தான்!

எங்களோடு வாழந்த அடையாளம் தெரியாமல் வாழ்ந்தவன்!

இவனைப்பற்றி நாம் ஏதாவது பேசவேண்டுமானால் மௌனமாகக் கதை சொல்லும் இவனது படைப்புக்கள் பற்றித்தான் பேசவேண்டும்

தனது படைப்புக்களில்க்கூட எந்தவிதமான சர்ச்சைகளும் வந்துவிடக்கூடாது என்பதில் மிக மிகக் கவனமாக பார்த்துக்கொள்வது சிவபாலனின் சிறப்புக்களில் ஒன்று!.

புகழுக்கும் பகட்டிற்கும் அடிமைப்படாத இவன் பேன்ற சிறந்த நண்பனை இதுவரை நான் பார்த்ததில்லை

இவனைப்போல இன்னொரு நண்பனை நான் தேடவேண்டும்

இவனுக்காக என் இதயம் இரஞ்சுகின்றது

நண்பா!
உனக்காக இரங்கும் இதயங்களோடு எங்கள் குடும்பமும் இணைந்துகொள்கின்றது.

**பிரியாலயம் துரைஸ்**
ஒலிபரப்பாளர், தரிசனம் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்முடனே வாழ்கின்றாய்!...

மோசம் செய்தான் காலன், - தமிழ்த்தாய்
தாசனுன்னைத் தான் கவர்ந்தான்! - நல்ல
நேசம் கொண்டொழுகுமுன்னை - விண்ணில்
ஈசனுடன் இணைத்து விட்டான்!
பாசமுடன் பழகும் சோதரா! - பிரான்சு
தேசம் அழுகுதையா! - வயோதிப
வாசலைக் கூட எட்டாத உன்னிடத்தில் - விதி
மோசம் செய்ததையா!

உள்ளத்திலே அன்பும்,
உணர்வினிலே தமிழும்,
அள்ள அள்ளக் குறையாத
அட்சய பாத்திரம் போற்
தெள்ளு தமிழ்க் கவியும்
தெவிட்டாமல் எமக்களித்த
அன்புச் சகோதரா!
அன்னைத் தமிழ் நேசா!

பாவரங்கில் உன்னுடன் நான்
பாவிசைக்கக் காத்திருந்தேன்! - உன்
சா-விரங்கற் பாவெழுத
நேர்ந்ததையா சோதரனே! - உன்னை
வாவென்று மடலனுப்பித்
தன்னிடத்தே அழைத்த தேவன், - எமையோ
ஓவென்று அழ வைத்தான்,
ஒப்பாரி பாட வைத்தான்!

தாவி வந்து உனையணைத்த
தமிழ்த்தாயும் தவிக்கின்றாள் பார்! - நின்
நாவினில் வந்தமர்ந்து - கவி
நயனங்கள் புரிந்த தேவி! - உன்
ஆவி பிரிந்ததனால்
அழுகின்றாளையா பாராய்!

பாவிகள் பலரிருக்கப்
பாதியில் உனையெடுத்த
பாதகன் காலனென்றே
ஆவி துடித்தழுகின்றாள் பார்!

ஐயா, நின் மரணம்
பொய்யென்று ஒரு தடவை,
மெய்யான வார்த்தையொன்றை - இவ்
வையகம் ஏற்காதா? - உடற்
பையில் உன் உயிர் மூச்சு
மீண்டும் வந்து சேராதா?

பொய்யய்யா உன் மரணம்! - நீ
கை வீசி நடை போட்ட
காலம் தான் எம் நினைவில்!
மெய்யாக இன்றும் நீ
எம்முடனே வாழ்கின்றாய்!

கவிதாயினி **வினோதினி சண்முகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தே வாழ்வாகி இயங்கியவர்

எழுத்தாளர் சிவலிங்கம் சிவபாலன் அவர்களின் திடீர் மறைவுச் செய்தி அவரோடு பழகிய வர்களுக்கும் அவரை அறிந்தவர்களுக்கும் மிகுந்த அதிர்ச்சி செய்தியாகவே இருக்க முடியும். அவரது இன்முகமும் பண்பட்ட பேச்சும் எவராலும் எளிதில் மறந்துவிட முடியாது. ஈழமுரசின் நிறுவக ஆசிரியர் கப்டன் கஜன் மூலமாக சிவலிங்கம் சிவபாலனுடன் ஏற்பட்ட தொடர்பு அவர் பிரான்ஸில் இருந்து லண்டன் செல்வதற்கு முன்பு வரையிலும் மிக இனிமையாகவும் நெருக்கமாகவும் இருந்ததை என் நினைவுகளில் இருந்து எப்போதும் அழித்துவிட முடியாது.

நெருக்கடி நிறைந்த புகலிட வாழ்வியல் சூழலுக்குள்ளும் தொடர் எழுத்துப் பணி புரிந்த சமூகப் போராளியாக எம்மோடு வாழ்ந்தவர். புகலிட ஈழத்தமிழ் சூழலுக்கு அப்பாலும் சென்று தமிழகத் தமிழர்களுடனும் இணைந்து கலை இலக்கியப் பணி புரிந்தவர். சிறுகதைகள் கவிதைகள் இலக்கியமேடைகள் என தொடர்ந்து அவர் எம்மத்தியில் இயங்கிக்கொண்டே இருந்தார். சலிக்காத எழுத்தாணியாய் தான் வாழ்ந்த சமூகத்தின் கீறல்கள் மீதும், கிழிசல்கள் மீதும், ஆணி அறைந்து கொண்டே இருந்தார். புகலிடத் தமிழர் வாழ்வியல்த் துயரங்களையும், அவலங்களையும் தனது ஏராளமான கதைகளினூடே வெளிப்படுத்தி வந்தார். புகலிடத் தமிழ் சிறுகதை வெளியில் சிவலிங்கம் சிவபாலன் என்கின்ற பெயர் என்றென்றும் நிறைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. புகலிடத் தமிழ் இலக்கியத் தடத்தில் அவரின் இல்லாமை என்றென்றும் உணரப்பட்டுக்கொண்டே இருக்கும். சிவலிங்கம் சிவபாலனின் இடைவிடாத தொடர் எழுத்து என்கின்ற பணியை புகலிட எழுத்தாளர்களும் நெஞ்சேந்துவோமாக!

உன் நன்பன்

**மாணி நாகேஷ்**

எழுத்தாளர், விமர்சகர்

# 'மலர்வு" அவனை நினைவூட்டும்.

“தமிழில் சிந்தித்து தமிழில் எழுதக்கூடிய தலைமுறையின் உதிர்வு புகலிடத்தில் ஆரம்பமாகிவிட்டது” என்று “வெளிச்சம்” நூறாவது சிறப்பிதழிற்கு வழங்கிய நேர்காணலில் சொல்லியிருந்தேன். ஆனால் சிவலிங்கம் சிவபாலன் உதிரும் வயதான எழுத்தாளனா...? என்னால் நம்ப முடியவில்லை. அவனது மரணம் பற்றிய செய்தியை கேட்டபோது அதிர்ச்சியாகத்தான் இருந்தது. அதைவிடவும் அவனது களங்கமற்ற சிரிப்பின் பின்னால் வாழ்வியல் சோகம் புதைந்திருந்ததை அவனது சகோதரன் மூலம் அறிந்த போது இன்னும் கலங்கிப்போனேன். புலம்பெயர் வாழ்வியல் இன்னும் எத்தனை விசித்திரங்களை காண்பிக்க போகின்றதோ?

சிறுவட்டங்களாய் சிதறிப்போய்க்கிடக்கும் பாரிஸ் இலக்கிய சூழலில் எந்த வட்டத்துள்ளும் தன்னை சிக்கவிடாமல் அனைவருடனும் இன்முகத்துடன் கருத்துக்களை பகிரவும் கேட்கவும் தயாராக இருந்த சிவலிங்கம் சிவபாலனின் இழப்பு ஏற்கக்கூடியதொன்றல்ல. நினைக்கும் தோறும் வாட்டக்கூடியது.

அப்பால் தமிழில் எழுதுவதில் அவன் ஆர்வம் கொண்டிருந்தான். எழுதினான். அதற்கென தன் நண்பர்களை அறிமுகமும் செய்து வைத்தான். அவனது இயல்பும் சிறப்பும் அதுதான்.

அவனது “மலர்வு” சிறுகதையானது புலம்பெயர் இலக்கியத்தின் மாதிரிகளில் ஒன்றென எதிர்காலத்தில் சுட்டப்படும் என்றே நம்புகின்றேன். அக்கதை ஒன்றே போதும் சிவலிங்கம் சிவபாலனின் இலக்கிய வாழ்விற்கும், நினைவுக்கும்...

அன்பன்

**கி.பி.அரவிந்தன்.**

(கலை, இலக்கிய விமர்சகர்)

அப்பால் தமிழ் குழுமத்திற்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தித்திக்கும் உன் பேச்சு ஓய்ந்தனவா ?

நான் கண்ட சிவலிங்கம் சிவபாலா
உன்னை எழுத்தாளனாகவா இல்லை
கவிஞனாகவா இல்லை கலைஞனாகவா
மேடைப் பேச்சாளனாகவா இல்லை

நல்ல நண்பனாக நல்ல மனிதனாக
மனிதத்தை நேசிக்கும் நல்ல மனிதா
உன் பேச்சுக்கள் பிறரது மனதைப்
புண்படுத்தியதா இல்லை நானறியேன்

பார்ப்போரைத் தேடிச்சென்று பேசும்
பண்பான மனம் கொண்ட வசீகர முகமும்
பொன்னான எழுத்துக்களை குவித்துவந்த
உன் பேனாவுக்கும் ஓய்வு கொடுத்தாயா

பத்திரிகைகள் பல உன் பக்கத்தை தேடியது
வானொலிகள் உன் குரலோசையை தேடியது
மேடைகள் பல உன் பேச்சோசையைக் கேட்டது
கவியரங்க நாயகர்கள் உன் தொகுப்பை தேடினர்

சென்றுவிட்டார் அயல் நாடு என்றிருந்தோம்
அங்கிருந்து நீ மட்டும் வரவில்லை சேதிவந்தது
வந்ததுதான் வந்தது இப்படியொரு செய்தியா
கலங்காத உள்ளங்களும் கலங்கி நின்றன

தித்திக்கும் உன் பேச்சு ஓய்ந்தனவா
செவ்விதழ் சிந்தும் புன்னகை மறைந்தனவா
களையற்ற உன் உடல் விடை பெற்றுச்சென்றனவா
கலங்கினோம் கண்ணீர் சிந்தினோமல்லவா
நான் கண்ட சிவபாலா சிவபாலா (நீ மறைந்து)
நாள் இன்று முப்பத்தொண்டல்லவா
உள்ளத்தால் நல் காணிக்கை செலுத்துகிறோம்
உன் உடலைப் பிரிந்தோம்.

நட்பை மறவோம்.
**செவ்ரோன் அதிசயன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை வென்றவன் சிவபாலன்

எந்த ஞானியாயினும், வேதாந்தியாகினும் சாமி சன்நியாசியாயிருப்பினும் தனக்குக் கிட்ட மரணம் நிகழ்கையில் கலங்கிப் போவது மனித இயல்பு.

மரணித்துவிட்டார், இறந்துவிட்டார், தவறிவிட்டார் என்று இலகுவாகச் சொல்லுகின்ற தகவலல்ல மரணம். மரணம் அவரவர் மனதைப் பாதிக்கின்ற நிலையிலேயே மரணத்தை நோக்குகின்றனர். மரணம் என்பது வாழ்வை வென்ற நிலை பிறந்துழன்றழிவது உயிர்களின் தொழிற்ப்பாடு பாரில் இப்பாடுதான் வாழ்வு எனப்படுவது.

இந்தப் பிரபஞ்ச மாயைகளுக்குள் கட்டுண்டு போராடிக் கொண்டிருக்கும் மானிடனின் வெற்றியே மரணம். மரணித்த ஆத்மாவிற்கு அதுவே வெற்றிநிலை அதுவே ஆனந்த நிலை.

மரணம் அழுவதற்குமட்டுமல்ல, தொழுவதற்குகுரிய நிலை மகா புனிதமானது. அதுவே பிறவியின் எல்லை.

எல்லா மனிதர்களுக்கும் அவரவர் இயங்கு நிலைக்கேற்ப மரணம் அவரவர் அளவுகளுக்குத் தயார்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த தயாரிப்பை நோக்கிய நமது ஓட்டம் எட்டி மரண எல்லையைத் தொடும்வரை உறுதிப்படுத்தப்பட்ட பயணச் சீட்டு. ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை வாழ்வே சாவாக, சாவே வாழ்வாக தலைகீழ் இலக்கணமாய் அமைந்துவிட்டது தினமும் இறப்புக்களையும், பிறப்புக்களையும் நம் இருப்பு நிலை கொண்டு விட்டது.

மரணம் இயல்பான தொன்றாகவும் சாதாரணமானதாகவும் தூரப் பார்வைக்குத் தோன்றலாம். அதனருகில் நெருங்கி நின்று பார்க்கையில் பயமானதும், துக்கமானதும் கூட நமது சொந்த மண்ணிலிருந்து உயிர்தப்பி ஓடி வந்து புகுந்து கொண்ட நாடுகளிலும் தினமும் வெவ்வேறு வடிவங்களில் அதிர்ச்சியான மரணங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம்.

நேற்றுப் பார்த்த மனிதன், என்னுடன் பல தடவைகள் ரி.ரி.என் தொலைக்காட்சியில் பலகவிதை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட சிவலிங்கம் சிவபாலன் திடீரென அமரதுவமடைந்தது அதிர்ச்சியான செய்தியாயிருக்கிறது. அவரை கவிஞனாக, கட்டுரையாளனாக, எழுத்தாளனாகக் கண்டேன். இலக்கிய சூழலுக்குள் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட இலக்கிய நண்பன், சமூக அக்கறையாளன்.

இவரது கவிதைகளிலும் சிறுகதைகள் மிக இலட்சணங்களோடு அமைந்தவை. சிறுகதைகளில் அவர் பிரயோகிக்கும் மொழிநடையில் நாம் மறந்துபோய்க் கொண்டிருக்கும்கிராமத்து பேச்சுமொழி விழித்துக்கொண்டிருக்கும், ஆர்ப்பாட்டங்களையும், அமளிதுமளிகளையும் விரும்பாத அமைதியான மனிதன். அவரது பேச்சும், செயலும் நிதானமானதும், மௌனமானதாகவும் இருக்கும். நிலம்நோகாமலும் மனம்நோகாமலும் நடந்து கொள்வதில் மிகுந்த சிரத்தையுடையவர்.சமூக நலன் மிக்க பொதுமை விரும்பி. அவரது திடீர்மரணம் கவலையானது. இருப்பினும் அவரது சகோதரர்களுக்கும் குடும்பத்தார்க்கும் ஆறுதல் சொல்லி ஆளுக்காள் தேற்றிக்கொள்வோம். தேறுவோம் எழுவோம். நாளைய புதுநாளை நோக்கி, அவர் ஆத்மா சாந்தியடைய பிராத்தித்து

**சு. கருணாநிதி**
கவிஞர், எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி

மரணம் மனிதர்களுக்கு நிச்சயமானது தான் நாம் மண்ணிலே ஜனிக்கும்போதே மரணமும் நிட்சயக்கப்படுகின்றது. பிறப்புக்குள்ளே இறப்பும் அடங்கி விட்டாலும் எம்பாச உறவுகள், நெருங்கிய நண்பர்கள், சிறந்த கலைஞர்கள், போன்றவர்களின் இழப்பினை ஏற்றுக் கொள்ள எம்மனம் மறுதலிக்கின்றது. அந்த வகையில்த் தான் நண்பன் சிவலிங்கம் சிவபாலன் அவர்களின் இழப்பினையும் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

ஒரு பகல்ப்பொழுது தொலைபேசி அழைப்பு மணி ஒலித்தது. லண்டனில் இருந்து நவஜோதி பேசுகின்றேன் என்றார். அவரின் குரல் வழமைபோல் பேசுவதல்லாமல் சோகம் நிறைந்ததாகத் தெரிந்தது. கேள்விப்பட்டீர்களா? என்று கலங்கிய குரலில்க் கேட்டார். ஏதோ ஒரு துயரச் செய்தியினைத்தான் சொல்லப்போகின்றார் என்பதனை அவரது குரல் உறுதிப்படுத்தியது.

ஆனால் சிவலிங்கம் சிவபாலனின் குரலை உச்சரிப்பார் என்று நான் எதிர் பார்க்கவில்லை. ஒரு கணம் அதிர்ச்சியாகவே இருந்தது. பல வருடங்கள் பாரிசில் வாழ்ந்து சில மாதங்கள் முன் சுகவீனம் காரணமாக லண்டன் சென்றதாக அறிந்துகொண்டேன். அவரது குழந்தை முகம் அடிக்கடி நினைவுக்கு வந்து சென்றது. பல தடவைகள் தொலைபேசியில் உரையாடிய அந்தக் கணப் பொழுதுகள் எல்லாமே நினைவுக்கு வந்தன.

நம்மோடு பேசிப்பழகி நம்மத்தியில் வாழ்ந்த ஒருவர் நம்மைவிட்டு இவ்வுலகை விட்டு நீங்கும்போது அவருடன் பழகிய பேசிய அந்த நினைவுகள் மட்டுமே நெஞ்சில் பதியம் போட்டு வைக்கப்படுகின்றன. சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள் என தன் கைப்பட எழுதிய பிரதிகளை எமது வானொலிக்காக எழுதி அனுப்பியிருந்த வேளையில் அவருடன் உரையாடும் சந்தர்ப்பங்கள் பலதடவைகள் கிடைத்தன.

அவருடைய எழுத்துக்கள் சில வேளைகளில் புரியாமல் குழம்பிய நேரங்களில் அவரோடு தொலைபேசி மூலமாகத் தொடர்பினை ஏற்படுத்திப் பேசுகின்றபொழுது அவரின் குழந்தைத்தனமான பேச்சும், மென்மையான உரையாடலும், எந்த விமர்சனத்தையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவமும், அவரிடம் நிறைய இருந்ததை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

எனது சகோதரியின் கணவர் பொறியியலாளர் சுரேந்திரனின் நெருங்கிய நல்ல நண்பனாக சிங்கப்பூரில் ஒரே அறையில் பல ஆண்டுகள் வாழ்ந்த நினைவுகளையும் அவர்கள் என்னுடன் பகிர்ந்து கொண்டபோது, சிவலிங்கம் சிவபாலன் அவர்களின் பல நல்ல குணங்களை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

மிகவும் எளிமையான சுபாவமும், எவரையும் குறை கூறாத பெருந்தன்மையும், சுறுசுறுப்பாக எழுதும் ஆற்றலும்,

சோகங்களைத் தன்னுள்ளே புதைத்து, அதனை வெளிக்காட்டாதபடி சிரித்த முகத்துடன் மற்றவர்களை நகைச்சுவை உணர்வோடு சிரிப்பூட்டி மகிழும் தன்மையும் கொண்ட இவர் தனது வாழ்க்கையினை மிக விரைவாக இறுதியாக்கிக் கொள்வாரென எவருமே நினைத்திருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் இழப்பு கலை உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.சிறுகதை, கவிதை, நாடகமென, பல வடிவங்களில் தன் எழுத்தினை நகர்த்தி புலம்பெயர் இலக்கியப் பரப்பில் தனக்கென ஒரு பெயரைத் தக்கவைத்துக் கொண்டவர். இவரின் படைப்புக்கள் பல பத்திரிகைகளில் வானொலிகளில் தொலைக் காட்சிகளில் வலம் வந்திருக்கின்றன.

புலம் பெயர் தேசத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய எழுத்தாளர் வரிசையில் சிவலிங்கம் சிவபாலன் அவர்களின் படைப்பும், எழுத்தும், காலத்தால் உச்சரிக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. இவரின் பிரிவினால் துயருறும் அனைத்துப் பாச உறவுகளுக்கும், நண்பர்களுக்கும், எமது ஆழ்ந்த அனுதாபங்களை எமது குடும்பம் சார்பாக தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

வானொலி நிகழ்ச்சி தொகுப்பாளர்
நிகழ்ச்சித் தயாரிப்பாளர்
**திருமதி- நவாஜோதி**

# கலை ஒளியின்...கண்ணீர் அஞ்சலி

உன்னை எண்ணி உன்னை எண்ணி பாட வந்தோம்
உண்மை உணர்வால் உள்ளம் உருகி நின்றோம்
சிந்தை வழி சிந்துகள் படையல் செய்தோம்
சிவபாலா உனக்காய் அஞ்சலி செய்தோம்.

அவன் புன்னகையும் மெல்லிய கவிதை செய்யும்
அவன் கவிதையும் மெல்லிய புன்னகை செய்யும்
அவன் கதைகளும் ஈழத்தின் நிலை கூறும்
அந்த ஈழமும் அவனது கதை கூறும்.
கவிஞர் சிவபாலனுக்கு...

சாவே உனக்கு சாவு வராதோ-எங்கள்
சாமான்ய கலைஞனை அழைத்தது ஏனோ?
நீயே கவிதைகள் கேட்டிட தானோ-இது
நீதியே அல்ல நீஅறிவாயோ?

கலைஞர்கள் மடிவது இல்லை ஐயா-உண்மை
கலைகளும் கரைவது இல்லை ஐயா
கலைஒளி அஞ்சலி உந்தனுக்காய்-அதை
கடவுளின் கருணையால் கேளும் ஐயா

சிவலிங்கா சிவபாலா-எங்கள்
சிந்தையின் அஞ்சலி உந்தனுக்காய்

கலை ஒளி **சத்தியா**
பிரான்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர் சிவலிங்கம் சிவபாலன்

ஈழத்து இலக்கிய உலகம் இன்னும் ஒரு படைப்பாளியை 23.05.2008 ல் இழந்துள்ளது. இலக்கியச் செழுமை மிக்க யாழ்ப்பாணத்திலுள்ள நாயன்மார்கட்டு கிராமத்தில 1954ல் பிறந்த இவர் வீரம் விளைந்த உரும்பிராய் மண்ணில் ஊன்றிக் கால் பதித்தவர். பின்னாளில் 1985 தொடக்கம் பிரான்ஸிற்கு புலம்பெயர்ந்தார்.

எவருடனும் பழகுவதற்கு இனிமையானவர். எவரையும் எளிதில் நண்பராக்கிக் கொள்வார். தமிழ் மக்களுக்கான விடியல் விரைவில் வரவேண்டும் என விரும்பும் பலரில் இவரும் ஒருவர். தியாகி சிவகுமாரன் பற்றி நிறையவே அறிந்து வைத்திருந்தார்.

ஊரில் இருந்த காலத்திலேயே தேன்மலர் எனும் சஞ்சிகையை நடத்தியுள்ளார். கவிதை, சிறுகதை, கட்டுரை என தன் எழுத்தை விரிவுபடுத்தினார். ஈழமுரசு, எரிமலை, உயிர்நிழல், போன்ற பத்திரிகை, சஞ்சிகைகளில் எழுதி வந்துள்ளார். 1998 ல் 'சுரங்கள் மாறி......' எனும் சிறுகதைத் தொகுப்பை உருவாக்கியிருந்தார். பலரையும் நேசித்தார். எழுத்தாளர் கலாநிதி சொக்கன் அவர்கள் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தார். அவரின் மாணவன் என்று சொல்வதில் பெருமைப்பட்டுக் கொண்டார். அதனால் தான் காற்றுவெளி நூலகம் வெளியிடும் இலக்கியப்பூக்கள் எனும் தொகுதிக்கு கலாநிதி சொக்கன் அவர்களைப்பற்றிய கட்டுரையை எழுதித் தந்துள்ளார்.

நிறைய வாசிக்கும் பழக்கம் உள்ள இவர் இங்கிலாந்திற்கு வந்தபின்பு ஒரு இலக்கிய வெறுமையை உணர்ந்தவராகக் காணப்பட்டார். அதனால் தானோ என்னவோ காற்றுவெளி நூலகத்தை தன் வாசிப்புக்காகப் பயன்படுத்த தொடர்பு கொண்டார் சிலநாட்களிலேயே இதய அறுவைச் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார். பின்னரும் இலக்கிய ஆர்வலர்களுடன் அதிகமாகவே தொடர்புகளை பேணிவந்தார். இலக்கியம் பற்றி பேசுவதற்கான தன் ஆதங்கங்களை, ஆர்வத்தை எழுத்தாளர்களுடன் பேசும் போது வெளிப்படுத்தினார். அவரின் வார்த்தைகளில் மெல்லியதான சோகம் இழையோடியதையும் எம்மால் உணர முடிந்தது. சிறுவயதின் நாடக முயற்சிகளை மீட்டுப்பார்த்து இப்பொழுது அது முடியாத ஏக்கம் எமக்குப் போலவே அவருக்கும் இருந்துள்ளது. தன் படைப்புகள் முழுவதையும் தொகுத்து ஒரு நூலாகவும் தனித்து ஒரு நாவலும் எழுதத் திட்டமிட்டிருந்தார்.

அவரின் ஆசைகள் நிறைவேற நாமும் இறைவனைப் பிரார்த்திப்போமாக...

**முல்லைஅமுதன்**
எழுத்தாளர், ஈழத்து நூல்கள் சேகரிப்பாளர்
காற்றுவெளி (லண்டன்)
23.05.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் இலக்கிய உலகில்
# நிரப்பிட முடியாத இடம்

**அமரர் கவிஞர்: சிவலிங்கம் சிவபாலன் அவர்களின் பிரிவு**

அஞ்சலி..!

தேன்தமிழிழை கவியாக்கி படிக்கவைத்த பாவலனே
தேடுகிறார் தமிழரிங்கு உன்பா படிக்க
நாவேந்தன் போல் பாடி புகழ்கொண்ட பாவலனே
வண்ணையுனை தேடுகிறார் வந்திடுவாய் ஒருகணமே..!

செங்கரும்பு சாறதனை தேனூற்றிக் குழைத்தாற்போல்
சங்கொலியாயக் கவிதைதந்து தமிழர்களை பொங்கவைத்தாய்..!
பொங்கிய தமிழர் கண்டிடும் வெற்றிகளை
காணாது கண்முடியதேன் தம்பி சிவபாலா..!?

சிங்கமென தமிழர்களை சிலிர்த்தெழ வைத்தவனே
தங்கத்தமிழ்தாயின் கைவிலங்குடைக்க கவி படைத்தவனே
பழம் நிறைந்த மாமரத்தை சுற்றிய பறவையைப்போல்-தமிழ்ப்
பாவலர்கள் கூட்:டமதை சுற்றிவந்த கவிமகனே..!

அன்பென்னும் வேலியிட்டு அனைவரையும் கனியவைத்தாய்
வார்த்தைப் பண்புடனே பழகி நீ வெற்றிகொண்டாய்-எம்மை
எண்ணித் துடிக்கவிட்டாய் இதயத்தை வேகவைத்தாய்
எங்கு சென்றாய் சிவபாலா தேடுதடா விழிகளிங்கே..?

கோபுரத்து வாசலிலே தோறணமாய் நின்றவனே
தாயகத்து நிலையுணர்ந்து தணலாகித் துடித்தவனே
நெஞ்சு வெடிக்குதையா நிலைகுலைந்து போகுதையா
உந்தனது செய்தியது பொய்யென்று வராதோ..!

சாந்தி ..! சாந்தி..!! சாந்தி!....!!

ஆறாத்துயரில்
**வேலணையூர் பொன்னண்ணா**
கவிஞர், எழுத்தாளர்
டென்மார்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பன் கழகம்
இலக்கிய இலக்கணத் திங்களிதழ், பிரான்சு

திருவள்ளுவர் ஆண்டு 2039

# தமிழ் மணக்கும் சிவபாலா

சிரித்த முகமும்! செம்மலர்போல்
சிவந்த நிறமும்! செந்தமிழைத்
தரித்த தலையும்! நற்பண்பு
தழைத்த உளமும்! தேனுரையை
விரித்த வாயும்! இனப்பற்றை
விளைத்த கையும்! உன்னுடலை
எரித்தால் கூடத் தமிழ்மணக்கும்!
என்றன் தோழா! சிவபாலா!

அன்னைத் தமிழின் அழகேந்தி,
ஆற்றல் மின்னும் அறிவேந்தி,
முன்னை முகிழ்த்த புகழேந்தி,
மூட்டும் வீர அனலேந்தி,
கண்ணைக் கவரும் கலையேந்தி,
கருத்தைக் கவரும் கவியேந்தி,
உன்னை நினைத்தால் தமிழ்மணக்கும்
உண்மைத் தோழா! சிவபாலா!

கவிஞர் கி. பாரதிதாசன்

கம்பன் கழகம் : பிரான்சு.
KAMBAN KAJAGAM - FRANCE
6, rue Paul Langevin, 95140 GARGES LES GONESSE, FRANCE
www.kambane.com e.mail: kambane2007@yahoo.fr
00 33 (0)1 39 93 17 06 – 00 33 (0)6 34 32 02 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் பிறப்புக்களின் உருகல்.............

எங்களுடன் கூடிப்பிறந்த பாசமிகு சகோதரனாக மட்டுமல்ல! எங்களின் கற்றலுக்கு வழிகாட்டிய நல்ல ஆசானாகவும் இளமையில் வறுமை கூடாது என்பதற்காய் வெளிநாடுகளில் நாமும் நலமுடனும் வளமுடனும் வாழ வழி வகுத்த அண்ணா, அமைதியாக, அடக்கமாக, எல்லோருடனும் அன்பாகப் பழகவேண்டும் என அடிக்கடி சொல்வீர்கள். நீங்கள் சொன்ன பாதையில்தான் நாங்கள் நடந்து வருகின்றோம். ஆனால் நீங்கள் எங்களை விட்டுப் பிரிய எப்படித்தான் மனம் வந்ததோ?.

கடவுளுக்குத்தான் கல் மனமோ? நான்கு சகோதரர்களாய் ஒன்றாய் இருந்த எங்களிடம் இருந்து உங்களை பிரித்து எடுத்துவிட்டான். நீங்கள் எங்கள்மீது வைத்திருந்த பாசத்திற்கு அளவே இல்லை. உங்கள் மனம் புண்படும் விதமாக ஏதாவது ஒரு வார்த்தை கதைத்திருப்போமா? எங்கள் அம்மா அப்பாவிற்குச் சமமாகவல்லவா இருந்தீர்கள். ஏனண்ணா இந்த அவசரப் பயணம்?

புலம் பெயர்ந்த நாட்டில்க்கூட பணம், பகட்டு வாழ்க்கை, என வாழ்வோர் மத்தியில் நீங்கள் மிக எளிமையான இனிமையான வாழ்க்கையை வாழ்ந்ததையிட்டு நாங்கள் பெருமைப்படுகின்றோம்.

அன்னிய நாட்டில் இருந்துகொண்டு உங்களது எழுத்தாற்றலால், பேச்சுத் திறமையால், பெயரோடும், புகழோடும், வாழ்ந்தீர்கள் என்பதனை நினைக்கும்போது நாங்கள் அளவில்லா மகிழ்ச்சியடைந்து கொண்டோம்.

ஏன்தான் உங்களுக்கு இப்படி ஒரு ஆசை வந்ததோ தெரியவில்லை. எல்லாச் சகோதரர்களையும் பார்க்கவேண்டும், எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து வாழவேண்டும், என்று லண்டனுக்கு வந்தீர்கள். மொத்தமாகப் பார்த்தால் நான்கே மாதங்கள்தான் எங்கள் கைகளால் உங்களுக்கு பணிவிடை செய்யும் பாக்கியம் கிடைத்தது. இதைக்கூட கடவுள் எங்களுக்குக் கொடுத்த வரம் என்று இனிதே செய்து மகிழ்ந்திருந்தோம்.

எங்கள் வாழ்க்கையின் ஒளிவிளக்காக இருந்த உங்களுக்குப் பணிவிடை செய்ய இந்த நான்கு மாதங்கள் போதுமா?

பொறுமை பொறுமை என்றிருந்த உங்களை கடவுள் பரீட்சித்துப் பார்த்திருக்கின்றார் போலும். புன்முறுவல் பூத்த முகத்தோடு இருக்கும் உங்களை மென்மையான இதயம் கொண்ட உங்களை வன்சொல் கேட்க வைக்காமல், யாருக்கும் பாரமாக வாழ வைக்காமல், காலன் உங்களைக் கவர்ந்து சென்றானோ?


அண்ணா! உங்களை நாங்கள் இனி எப்போது எங்கே காண்போம்? உங்களது இறப்பின் பின்புதான் நீங்கள் எல்லோரது மனங்களிலும் எவ்வளவு ஆழமாக குடியேறியுள்ளீர்கள் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடிந்தது.. ஏனெனில் உங்களது இறுதிக்கிரியையில் உங்களுக்காக கண்ணீர் வடிக்காத ஒருவரைக்கூட எங்களால் பார்க்க முடியவில்லையே!.

அண்ணா நாங்கள் ஆறுதலடைகின்றோம். நீங்கள் இப்போது எங்களது அப்பா அம்மாவுடன் இணைந்திருப்பீர்கள் என்பதனால். எங்களையெல்லாம் மண்ணுலகில் வளமாக வாழவைத்துவிட்டு விண்ணுலகம் சென்றுள்ள உங்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை தினமும் மன்றாடுவோம்

உங்களது நினைவுகளோடு வாழும் பாசமிகு சகோதரர்கள்
**குமரன்**
**ஜெயந்தா**
**ஜெனனி**
(லண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் இனிய நண்பா!



அன்பின் அடையாளம்
அடக்கத்தின் உறைவிடம்
பண்பின் சிகரம்
கள்ளமற்ற சிரிப்பின் முகவரி
இன்று எல்லோரையும் துக்கசாகரத்தில் ஆழ்த்தி
அமரத்துவம் அடைந்த நண்பர் சிவலிங்கம் சிவபாலன்
அன்பாலும் பண்பாலும் எல்லோரையும் கட்டிப்போட்ட
கள்ளம் கபடமற்ற இனிய நண்பர்.

சிறுகதை எழுத்தாளராக அறிமுகம்தந்து
இலக்கிய நண்பராக மகாஜனர்களோடு உறவு கொண்டு
எமது நிகழ்வுகளின் விமர்சகராக நின்று ஊக்கம் தந்த
உயர்ந்த பண்பாளன் இன்று எம்மிடையே இல்லையே
என்று எண்ணும்போது இதயம் கனக்கின்றது
காலனை காலால் உதைத்திடவா முடியும்
கதையாக எழுதிவைக்கத்தான் முடிந்தது எம்மால்.

இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்
உற்றார் உறவினர்களோடு
நாமும் கண்ணீரோடு சங்கமிக்கின்றோம்.

மகாஜனக் கல்லூரி ப.மா.சங்கம் பாரிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரைமீட்டிப் பார்க்கின்றேன்

எனது இனிய நண்பன் சிவபாலன்!.......

இவனைப்பற்றி நினைக்கும்போது நாம் புலம் பெயர்ந்து பல வருடங்களைக் கடந்து இன்னொரு நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற போதிலும் இன்றும் சில சமயங்களில் எமது பள்ளிக்கூடக் காலத்து சிறு வயது நண்பர்கள் நினைவினில் வந்து போவதுபோல....... நான் சிவபாலனுடன் முதல் முதலில் சந்தித்துக்கொண்ட ஆரம்பகால நினைவுகள் எல்லாம் அலை அலையாய் வந்து போகின்றன.

இன்று நாம் ஐரோப்பியர்களைப்போல மேசையில் உணவை வைத்து வகை வகையான கறி வகைகளுடன் கரண்டியால் கிள்ளிச் சாப்பிட்டபோதும் அன்று சின்ன வயதில் அம்மா முதல்நாள் இரவு முடிந்துபோன வெறும் சட்க்குள் பழைய சோத்தைப் போடு டு குழைத்துத்தர அதை பச்சடிச் சம்பலுடன் தொட்டுத்தின்ற நாட்களின் சுவைக்கு நி-கராக இன்று வருவதில்லையே! அதுபோலத்தான் எங்கள் நட்பின் ஆரம்பகால நினைவுகளும்.

சிவபாலனை நான் முதலில் சந்தித்துக்கொண்டதே ஒரு இலக்கிய விழாவில்த்தான்!. கவியரங்கம் ஒன்றில் நான் கவிதை பாடிவிட்டு அரங்கத்தைவிட்டு வந்தபோது நான் முன்னொருமுறையும் சந்தித்திருக்காத சிவபாலன் ஓடிவந்து கைகுலுக்கி என்னைப் பாராட்டுகின்றான்.

இந்த உயர்ந்த பண்பை எல்லோரிடமும் பார்க்கமுடியாது. தனது மனதிற்கு சிறந்தது என எது பட்டாலும் அந்தச் சிறப்புக்குரியவரை உடனேயே பாராட்டிவிடுவார். இந்த சிறந்த பண்பை இவரது முதல்ச் சந்திப்பிலேயே கண்டுகொண்டேன்.

அதன் பின்னரும்கூட நாங்கள் சந்தித்துக் கொண்டவை இலக்கிய விழாக்கள்தான். பின்னர் பல கவியரங்கங்களிலும் பட்டிமன்றங்களிலும் ஒரே மேடையில் ஒரு அணியாகவும் சில சமயங்களில் எதிர் எதிர் அணிகளாகவும் கருத்தாடியிருக்கின்றோம். எதிர் வாதம் செய்கின்றபோதுகூட அரங்கத்தை கலகலப்பாக வைத்திருக்கவேண்டும் என்பதற்காக எனது கருத்துக்களை நையாண்டி செய்து நகைச்சுவையாகப் பேசுவார். அப்படிப் பேசுவதனால் எங்கே எனது மனம் புண்பட்டுவிடுமோ என்பதற்காக மேடையேறுவதற்கு முன்னரே அதன் சாரத்தை எனக்கு சிறு கோடிட்டுக் காட்டிவிடுவார். அப்படி மென்மையான இதயம் சிவபாலனுக்கு.

ttn தொலைக்காட்சியில் நான் தயாரித்து வழங்கிய "சித்திரம் பேசுதடி" என்னும் கவிதை நிகழ்ச்சி நூற்றுக்கும் மேற்பட்ட எபிசொட்களைத் தாண்டியிருந்தது. இதில் ஐம்பதிற்கும் மேற்பட்ட நிகழ்ச்சியில் சிவபாலன் பங்குபற்றியிருக்கின்றார். நிகழ்ச்சிக்கு வந்தோம் ஒளிப்பதிவு செய்தோம் அத்துடன் எமது கடமை முடிந்துவிட்டது என்றிராது மறுநாள் தொலைபேசியில் ஒளிப்பதிவாகிய நிகழ்ச்சி மற்றும் ஒளிபரப்பான நிகழ்ச்சிளைப் பற்றியெல்லாம் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்வார். தான் பங்குபற்றாத நி-கழ்ச்சியாக இருந்தாலும்கூட அந்த நிகழ்ச்சி சிறப்பாக அமைவதற்கான ஆலோசனைகளைச் சொல்லிக்கொள்வார். நிகழ்ச்சிகளைப் பார்த்துவிட்டு அதில் உள்ள குறைகளையே சொல்லிக்கொள்பவர்கள் மத்தியில் எதிலும் நல்லவற்றை மட்டும் பார்க்கின்ற அந்த உயர்ந்த பண்பை சிவபாலனைப்போல ஒரு சிலரிடம்தான் பார்க்க முடியும்.

இன்று சிவபாலனுக்கு அஞ்சலி எழுதுவதற்கு பேனாவை எடுத்தபோது இந்தப் பழைய நினைவுகள் எல்லாம் இரைமீடழ்கப்பட்டு முட்டி மோதிக்கொண்டு போகின்றது

சிவபாலன் என்னும் அந்த மனிதம் நிறைந்த மனிதனின் செயல்ப்பாடுகளில் எதனை முதலில் சொல்வது? எதனை விலக்கி வைப்பது?

எவரையும் விலக்கி வைக்காமல்! எவர் மனதினையும் நோகவைக்காமல்! எல்லோரையும் தனது நண்பர்களாக அரவணைத்துக்கொண்ட அவரது பண்பினைச் சொல்வதா?

இலக்கியத்தின் எந்த ஒரு பகுதியையும் விட்டுவைக்காமல் தான் எடுத்துக்கொண்ட கருவைச் சிறப்பாகத் தொகுத்து கதைகளாக கட்டுரைகளாக கவிதைகளாக செய்திகளாக தொகுத்துத்தரும் அவரது கற்பனைத் திறனைச் சொல்வதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரங்கங்கள் கருத்தரங்கங்கள் பட்டிமன்றங்களில் விவாதிக்கும்போது எதிரணியின் மனங்கள் நோகாத வண்ணம் நகைச்சுவையாகவும் அதே நேரத்தில் மிகச் சாதுா்யமாக தனது கருத்துக்களை முன் வைக்கும் சாமா்த்தியத்தைப்பற்றி சொல்வதா?

இப்படி இப்படியாக இன்னமும் இன்னமும் சொல்லிக்கொண்டே போகலாம் முதலில் சிவபாலனின் வாழ்க்கையைப் பார்ப்போம்

இலக்கியச் செழுமைமிக்க யாழ்ப்பாணத்தில் உள்ள நாயன்மார்க்கட்டு என்னும் கிராமத்தில் 06- 04 -1954ல் பிறந்த இவர் வீரம் நிறைந்த உரும்பிராய் மண்ணில் ஊன்றிக் கால் பதித்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கல்வி பயின்று ஊரில் நில அளவையாளராக பணிபுரிந்து பின்நாளில்1985ல் புலம் பெயர்ந்து பிரான்ஸல் வாழ்ந்து இலக்கியத்துறை மூலமாக சகரையும் நண்பர்களாக்கிக் கொண்டவர். திருமண பந்தத்தின் மூலமாக இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையான இவரின் மூன்று சகோதரர்கள் லண்டனில் வாழ்ந்து வருகின்றார்கள்.

நடபைப் பற்றிச் சொல்லும்போது சிவபாலன் எனது நண்பன் எனச் சொல்லிக் கொள்வதைவிட சிவபாலனுக்கு நான் நண்பன் என்று சொல்லிக்கொள்வதிலேயே பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். அது ஒன்றே போதும் சிவபாலன்மீது நான் வைத்துள்ள மரியாதையை வெளிப்படுத்திக்கொள்வதற்கு.

சிவபாலனை இலக்கியவாதி என்னும் பார்வையோடு பார்த்தால்....!

புலம் பெயர்ந்த மண்ணில் இலக்கியத்துறையில் சிவபாலனைத் தெரியாதவர்களே இருக்கமுடியாது! இலக்கியத்தில் எந்தப் பகுதியில் நாம் இவனைரப் பார்க்கவில்லை? தாயகத்தில் வாழ்ந்த காலத்திலேயே "தேன்மலர்" என்னும் இலக்கியச் சஞ்சிகையை நடாத்தியிருக்கின்றார். ஆர்ப்பாடமே இல்லாமல் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வெளிவருகின்ற பிரபலமான பத்திரிகைகளிலெல்லாம் ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியிருக்கின்றார் இதில் சில கதைகளை அந்தப் பத்திரிகைகளே மறு பிரசுரம் செய்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது!. இவைதவிர தொலைக்காட்சி வானொலி மேடைகளென நாநூறுக்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியதுடன் நினைவுக் கட்டுரைகள், வரலாற்றுக் கட்டுரைகள், நாடகங்கள், போன்றவற்றுடன் பாரிஸில் வாழ்ந்து வரும் பிரபல கலைஞர் நிர்மலா-ரகுநாதன் அண்ணன் அவர்கள் தயாரித்து இயக்கிய "பரமபதம்" என்னும் சின்னத்திரைப் படத்திற்கு கதைவசனம் எழுதியிருக்கின்றார். இவைகளோடு பல அரங்கங்களை தனது இலக்கிய பேச்சுக்களால் அலங்கரித்திருக்கின்றார்

சில வருடங்களுக்கு முன்னராக தனது சிறுகதைகளில் சிலவற்றைத் தொகுத்து "சுரங்கள்மாறி" என்னும் தலைப்பில் நூலாக்கிய சிவபாலன் அவர்கள் அதை வெளியிடாமலேயே வைத்திருந்தார். சில மாதங்களுக்கு முன்னனராக நானும் நண்பர்கள் ரி.தயாநிதி கே.பி.லோகதாஸ் போன்றவர்கள் முயற்சியெடுத்து திருமறைக் கலாமன்றத்தின் மூலமாக மண்டபத்தையும் ஒழுங்கு செய்துவிட்டு சிவபாலனிடம் "நீர் புத்தகங்களோடு மண்டபத்திற்கு வந்தால்ப் போதும்" எனத் தெரிவித்தோம். அப்போதும் அதை அன்பாக நிராகரித்துவிட்டார்! இதனால் இவர்மீத நாங்கள் கோபப்டதும் உண்டு. பின்பு அதற்கான காரணத்தை நாம் வினாவியபோது யாரோ ஒரு பெரிய இலக்கிய வாதி சொன்னாராம் "இப்பொழுது பாரிஸில் புத்தக வெளியீடுகளெல்லாம் பணச்சடங்காக மாறிவிட்டது" என்று. அந்தக் காரணத்தாலேயே தான் புத்தக வெளியீட்டை விரும்பவில்லையெனக் கூறியிருந்தார்.

இன்று அதே திருமாலக் கலா மன்றத்தின் ஆதரவோடு நடைபெறும் அவரது அஞ்சலி நினைவரங்கிலேயே அந்தப் புத்தகத்தை வெளியிடுகின்றோம் அந்த நிகழ்வில் சிவபாலன் மட்டும் எங்களோடு இல்லை.

நண்பா உனது நினைவுகள் மிக நீளமானவை. அவை மனதில் இருந்து அகற்றப்பட முடியாதவாறு மிகவும் ஆளமானவையும்கூட. வரும் காலங்களில் உனது படைப்பக்ளில் சிலவற்றை தொகுத்து நூலாக்க இருக்கின்றோம் அப்பொழுது இன்னம் நிறைய பகிர்ந்து கொள்வோம்

இப்பொழுது விடைபெறுகின்றேன்.

நட்பு மறவா நண்பன்
கலைஞர் காவலர்
**வண்ணை தெய்வம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாரி ராகம் வாசிக்கின்றேன்.

நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்
என இறுமாப்போடு இருப்பவர்களுக்கெல்லாம் சிவபாலனின் மரணம் ஒரு எச்சரிக்கையை சொல்லி வைத்திருக்கின்றது!.

அது என்னவென்றால் வாழ்வு நிரந்தரமானதல்ல! ஆனால் மரணம் நிச்சயமானது என்பதுதான். அந்த மரணம் இன்றும் வரலாம் நாளையும் வரலாம் சில ஆண்டுகள் அல்லது பல ஆண்டுகள் கழித்தும் வரலாம் என்பதுதான்.


வாழ்கின்ற காலத்தில் நாலுபேர் போற்றுகின்றபடி வாழவேண்டும் என்பது பெரியோர்களின் அறிவுரை. நண்பன் சிவபாலன் அப்படித்தான் வாழ்ந்தான் லண்டனில் நடந்த சிவபாலனின் இறுதிச் சடங்கில் நான் நேரில் பார்த்தேன். சில இரும்பு இதயங்கள்கூட சிவபாலனுக்காக உருகி அழுததை!

பூபாள ராகமே வாசிக்க விரும்பும் எனது வாத்தியக்கருவிகளில் இன்று முகாரி ராகத்தைப் பாடவைத்துவிட்டான் சிவபாலன்.

இனி சிவபாலனைப்போல இன்னொரு நண்பனை பெற்றுவிட முடியாது. ஆம் சிவபாலனின் இடத்தை புதிதாக யாரும் நிரப்பிவிடவும் முடியாது.

அந்த இனிய நண்பனுக்கு என் இதயத்தாலான அஞ்சலிகள்

**எம். குருநாதன்**
இயக்குனர்
இளையநிலா இசைக்குழு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்...................

ஒரு மனிதன் தான் பிறந்த மண்ணையும் தனது சமூகத்தையும் எவ்வளவு நேசிக்கின்றான் என்பதைப் பொறுத்தே சமூகத்தில் உள்ள அமைப்புக்களும் ஊடகங்களும் அந்த மனிதனை அங்கீகரிக்கின்றன.

அமரர் சிவபாலன் அவர்கள் தனது எழுத்துக்களாலும் கருத்துக்களாலும் தான் பிறந்த மண்ணையும் அந்த மண்ணின் மக்களையும் அவர்களது நியாயமான கருத்துக்களையும் வலியுறுத்தி வந்ததனால் அனேகமான ஊடகங்கள் இவரது மரணத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ளாமல் முக்கியத்துவம் கொடுத்து செய்தியாக பிரசுரம் செய்தும் ஒளி ஒலிபரப்பியும் அஞ்சலி செய்தும் கௌரவப்படுத்தியிருந்தன. அந்த ஊடகங்களுக்கு நன்றி தெரிவிப்பது நமது கடமை யாகின்றது. அந்த வகையில் குடும்பத்தார் சார்பில் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பத்திரிகைகள்

வீரகேசரி தினக்குரல் ஈழநாடு. (ஐரோப்பா) ஈழமுரசு (ஐரோப்பா) புதினம் (லண்டன்) உதயன் (கனடா) சஞ்சிகைகள் முற்றம் (பிரான்ஸ்) கம்பன் (பிரான்ஸ்)

வானொலிகள்

I.B.C சர்வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.- (லண்டன்) (I.T.R ஐரோப்பிய தமிழ் வானொலி (ஜேர்மனி) நடா மோகனின் வானொலி (லண்டன்)

தொலைக்காட்சி

தீபம் (லண்டன்)

இணையத்தளம்

லங்காஸ்ரீ

மற்றும் இவ் அஞ்சலி நிகழ்வை நடாத்துவதற்கு மண்டபத்தை ஒழுங்கு செய்து தந்த திருமறைக் கலாமன்றத்திற்கும் ஒலி அமைப்பை ஏற்படுத்தித் தந்த திரு அரியம் மாஸ்ரர் அவர்கட்கும். வாகன உதவி புரிந்த கே.பி. லோகதாஸ் அவர்கட்கும் இச் சிறப்பு மலரில் அமரர். சிவபாலன் அவர்களின் சிறப்புக்களையும் பெருமைகளையும் கட்டுரைகளாகவும் கவிதைகளாகவும் எழுதித்தந்த படைப்பாளிகளுக்கும். மலர் அட்டை அழகுபடுத்திய மனோ அவர்களுக்கும் மட்டையைத் இலவசமாக அச்சிட்டுத் தந்த கிருஸ்ணா அச்சகத்தினருக்கும் மற்றும் கணனியில் உதவிய தீபன், கொப்பி லாசப்பல் அரவிந்தன், விழா ஒருங்கினைப்பில் எங்களோடு கைகோர்த்த மா.கி.கிரிஸ்ரியன் ஆகியவர்களோடு இவ் விழாவினை சிறப்பாக நடத்துவதற்காக பொருளாதார உதவிகளை உரிமையோடு தந்து உதவியவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**விழாக் குழுவினர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவலிங்கம் சிவபாலனின்
# இறுதிப் பாடல்

*பல்லவி*

சொந்தங்கள் தேடும் என் மனமே
சொந்தங்கள் தானவை என் வசமே

*அனுபல்லவி*

புலம் பெயர்ந்தேன் துயர் உணர்ந்தேன்
இனி வருநாள் மகிழ்ந் — திருப்பேன்

*சரணம்*

இளமை.... யிலே அரசனைப்... போல்
உள... நிறைவில் மகிழ்ந்.... திருந்தேன்
பழமை.... யினை துறந்..... திருந்தே
புதுமை.... பல நினைந்.... திருந்தேன்
பருவந்..... தந்த மனப்..... பலத்தை
புருவம்.... வரை வளர்த்திருந்தேன்
என் எழுத்தில்.... துணி.... விருக்கும் — நான்
எழுதும்வரை விரிந்... திருக்கும்
வானையெட்டும் நிலை வரைக்கும்
என் குரலில் சுரமி.... ருக்கும்
எட்டும் நல்ல உறவு .... வரை
என் விழியோ விரிந்.... திருக்கும்
துயில் மறந்து போனா...லும்
தமிழ் மறந்து போ....வேனோ
அயல் மண்ணில் ஆ... னாலும்
உனை மறந்து போ... வேனோ?

(ஆக்கம் சிவா)



கவிஞர் சிவலிங்கம் சிவபாலன் அவர்கள் இறப்பதற்கு
சிலநாட்களுக்கு முன் எழுதிய அவரது இறுதிக்கவிதை இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org